தீபம்:01


# ஆத்மஜோதி

ஒளி : 12

ஆத்மீக மாத சஞ்சிகை

சித்திரை- 2006

18 APR 2006
பெற்றுக்கொள்ளப்பட்டது



மகாதேவசுவாமி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி - தெற்கு பிரதேச சபை
18 APR 2006

உ
சிவமயம்
# ஆத்மஜோதி
தாபிதம் : 1948

# ARTHMAJOTHY
Est. 1948
ISSN 17039185

தீபம் : ஒளி
பார்த்திப வருடம்
சித்திரை
2006

பதிப்பாசிரியர்
நா. முருகையா
தியான
மணிமண்டபம்

எழுத்தமைப்பும்
அச்சுப் பதிப்பும்
ஜெயராம் பிறின்ரேஸ்

வெளியீடு
ஆத்மஜோதி

தியான மணிமண்டபம்
ஏழாலை.

தொடர்பு முகவரி
நா.முருகையா,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

## உள்ளடக்கம்

1. அருள்வாக்கு 02
2. ஆசியுரை 03
3. வாழ்த்துப்பா 04
4. சிவானந்த தரிசனம் 05
5. தியானம் 08
6. கிருபானந்தவாரியார் சுவாமிகள் 12
7. சீர்தூக்கிப் பார்ப்போம் ....... 16
8. சிவம் காக்கும் 19
9. நாம ஜெபம் அவசியம் 23
10. வன்னி மாவட்டக் கிளிநொச்சி....... 24
11. பாரதியின் வழிபாட்டுக் கொள்கை 25
12. யோகர் சுவாமிகள் 28
13. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை 33
14. அன்றாட நல்வாழ்விற்கு பத்து விதிமுறைகள் 35

| | | |
|---|---|---|
| பிரதி | :- | 30/= |
| வருட சந்தா | :- | 400/= |
| ஆயுள் சந்தா | :- | 3000/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாக்கு

எல்லாம் உணர்ந்த பலகோடி நாமங்கள் கொண்ட சிவபெருமானைப் 'பித்தன்' என்று அழைத்துத் துதிக்கலாமா? கடவுளைப் பித்துக் கொண்டவராக அழைப்பது எவ்வாறு பொருந்தும்?

சிவபெருமானின் குடியிருப்பு சுடுகாடு. அதனை யார் விலைக்கு வாங்குவார்கள்? அவருடைய அணிகலன்கள் பாம்பு. உண்ணும் பாத்திரம் மண்டை ஓடு. உண்ணுவது நஞ்சு. பூசுவது சுடலைப்பொடி. உடுப்பது தோல்.

இவை எதையும் யாரும் விரும்பி விலை தந்து பெறமாட்டார்கள். அவரும் அம்பலத்துள் இருப்பவர். அதனால் அவரும் ஒன்றையும் வாங்க மாட்டார். அப்படியிருக்க சிவபெருமான் சுந்திரமூர்த்தி நாயனாரிடம் வழக்குத் தொடர்ந்த போது, அவர் ஓர் அடிமைப்பத்திரம் கொண்டு வந்தார். சுந்தரர் தனக்கு அடிமை என்று அதில் எழுதப்பட்டிருந்தது. அதில் தன்னை ஈசன், 'நல்லூர் பித்தன்' என்றே குறிப்பிட்டிருந்தார். இது அவரே தயாரித்த பத்திரம். ஆகவே தம்மைத் தாமே பித்தன் என்று குறிப்பிட்டுள்ளரார் என்பது நன்கு தெளிவாகிறது.

சகல வேதாகமங்களையும் பெற்றவர் சிவபெருமான். அவர் ஞானமே வடிவானவர். எல்லாமாகி அல்லயுமாகி, இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச் சொல்லாமல் சொன்னவர் அந்த சிவபெருமான். அவரைப் பித்தன் என்று பெரியோர் புகழ்கிறார்கள். காரணம் என்ன? கருணை வளர்ந்து வளர்ந்து எல்லையின்றி பொங்கி வழிந்து பூரணமாக நிற்கும் நிலைக்கு பித்து என்று பெயரும் உண்டு.

ஒரு தாய் தவமிருந்து ஒரு மகனைப் பெற்றாள், இனிதே வளர்த்தாள். படிக்கவைத்தாள். பொருள் தேடி மகனுக்கு கல்யாணம் செய்து வைத்தாள். அந்த மகன் ஒருநாள் மனைவியின் மையலால் பெற்ற அன்னையைத் திட்டினான். அடித்தான். அன்னை எலும்பு முறிந்தும், மகன் மேல் கொண்ட அன்பு முறியாமல் அழுது கொண்டே சென்றாள். அந்தத் தெருக் கோடியிலுள்ள அம்பிகையின் சந்நிதிக்குச் சென்று தொழுதாள். அழுதாள், தேவி, பராசக்தி! உன் அருளால் பிறந்த புதல்வன். ஆயிரமாற்றுத் தங்கம் போன்றவன். அவனை அவள் இப்படிக் கெடுத்துவிட்டாள். என்னை அடித்தால் அடிக்கட்டும் பரவாயில்லை.

''அவன் நீண்ட ஆயுளுடன் வாழட்டும். அவனைக் காப்பாறு'' என்று வேண்டினாள். அப்போது அங்கு நின்றவர் ஆ! அடித்து விரட்டிய மகனை வாழ்த்துகிறாள் தாய். என்ன செய்வது? "பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு" என்று சொன்னார்.

இங்கே பித்து என்றால் என்ன பொருள்? நன்கு சிந்தியுங்கள். குற்றம் செய்த மகனை மன்னித்து வாழ்த்துகிற பெருங்கருணைக்குப் பித்து என்று பெயர். அதுபோல, ஆன்மாக்களாகிய நாம் புரிகின்ற பல்லாயிரம் பிழைகளைப் பொறுத்து அருள் புரிகின்ற சிவபெருமானும் பித்தன் என்று பெயர் பெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


***ஆத்மஜோதி மீண்டும் தொடங்கியதன் பணியை செவ்வையாக ஆற்றி வருடம் ஒன்று பூர்த்தியாகிவிட்ட நிலையில் அதன் பணி சிறக்க***

## எமது ஆசியுரை

சமய நூல்கள் வாசிக்கும் பழக்கம் மக்கள் மத்தியில் குறைந்துவரும் காலக்கட்டத்தில் பெரியார் நா.முத்தையாவின் பணியில் திரு நா.முருகையா அவர்கள் ஆத்மஜோதி இதழை மாதம் மாதம் பெரும் சிரமத்தின் மத்தியில் மக்கள் முன் வைத்து அவர்களின் மனதில் ஆத்மீக உணர்வைத் தூண்டி வருகிறார். அவரின் இலட்சிய நோக்கு நிறைவேற அன்பர்களின் ஆதரவு முக்கியம். ஓராண்டு நிறைவுறும் இத்தருணம் ஆத்மஜோதி இதழ் புதுப்பொலிவுடன் திகழ்ந்து எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்த வேண்டும். விற்பனை பெருகிட சைவசமய அன்பர்கள் அனைவரும் ஆதரவு வழங்கி திரு.நா.முருகையாவையும் மற்றும் பணியாளரையும் ஊக்கமும் உற்சாகமும் பெறச் செய்யவேண்டும். எல்லாவல்ல விநாயகப்பெருமானின் அருளால் ஆத்மஜோதி இதழ் பல்லாண்டு தொடர்ந்து பிரசுரமாகி சைவசமய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கவேண்டும்.

வளர்க ஆத்மஜோதியின் பணிகள்........

இங்ஙனம்
***வே. மகாலிங்கம்***
தலைவர்
திருநெறிக்கழகம்
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க ஆத்மஜோதி

## வளர்க வைதீக சைவம்

# *வாழ்த்துப்பா*

திங்களணி பரமனது சீர்த்திகளுமடியவர் தந்திறமும் பேசிப்
பொங்கொளி சேரருள் பரப்பு மாத்மீகஜோதி யென்னும் புனிதவேடு
இங்கெமக் கோரிடையூற்றா லேழாண்டு தடைப் பட்டேயிருந்த தின்று
சங்கரன் றன் திருவருளாற் புத்தாண்டில் மலர்ந்ததுகாண் சால நன்றே

அருளுடைய சாதுக்கள் சரிதமெல்லா மவனிமிசை பரப்புமேடு
தெருளுடைய ஞானியர் நற்குணமுடையோர் திருத்தொண்டே செப்புஞ்ஜோதி
பொருளுணர்ந்த வாசிரியன் முத்தையா எடுத்த பணி புனிதமென்றே
திருமலியுங் இரண்டாண்டு

திருவிளக்கா யொளியூட்டுங் குறைவில்லா ஆத்மஜோதி
பெருமை மிகுந்தாபனத்தின் பல்வேறு பணி விளங்கும் பெற்றிகண்டே
அருமைசெறி அணுகிநாளுந்
தருமமிகு தொண்டுகளுக்கு குதவிட நல்வழிவகுக்குந் தருணமீதே.

சைவமணந் தமிழ்மணமுங் குறையாது பரப்பியிடுந் தனப்பில்ஜோதி
தெய்வமணங் கமழ்தொண்டு மடியவர் தந்திருநெறியுந் தீட்டுஞ்ஜோதி
உய்வகையா லெமக்கீண்டு புனர்ஜென்ம மெடுத்த ஜோதி
மெய்மைபெறும் ஆத்மஜோதித் திங்களேடுலகில் விளக்கி வாழ்க

மேன்கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

– சிவத்தொண்டன் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானந்த தரிசனம்

## (ஆத்மஜோதி முத்தையா அவர்களின் ஸ்தல யாத்திரை)

சுவாமி சிவானந்தர் பக்தமடை என்ற கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திருச்சியில் வைத்தியக் கல்வி கற்று அதில் பட்டம் பெற்று, டாக்டர் குப்புசாமி என்ற பெயரோடு மலேசியாவில் வைத்திய அதிகாரியாக க் கடமையாற்றியவர்.

அவருடைய உபதேசங்களுள் சேவைக்கே முதலிடம் கொடுக்கிறார். சேவையைச் செயலில் காட்டினார். டாக்டராக இருக்கும் போது தபால் பட்டுவாடாச் செய்யும் ஒருவர் அறிமுகமானார். இருவரும் ஒரு இல்லத்திலேயே வசித்தனர். சுவாமி உத்தியோகத்தில் இருக்கும் போதே தபாற்காரர் வீட்டு வேலைகளையெல்லாம் செய்து முடித்துவிட்டுச் சாப்பிடுவதற்கு சுவாமியின் வருகையை எதிர்பார்த்திருப்பார்.

தபாற்காரர் காடு, மலையெல்லாம் திரிந்து தபால் கொடுத்துக் களைத்துப் போய் வரும் நேரங்களில் அவருக்கு தேநீர் குடிக்கக்கொடுத்து உபசரித்து, காலுக்கு எண்ணெய் போட்டு உருவி விடுவார். குப்புசாமியுடன் சேவை உடன் பிறந்தது என்றே கூறலாம். சேவைக்காகத்தான் டாக்டர் படிப்பு படித்தாரே தவிர, பணம் சம்பாதிக்க அல்ல என்பதை அவரது வாழ்க்கை எடுத்துக்காட்டியது.

மலேசியாவை விட்டு குப்புசாமி இந்தியா வந்தார். சென்னையில் ஒரு நண்பர் வீட்டில் தனது பெட்டி படுக்கைகளை வைத்தார். நண்பர் அப்பொழுது அங்கில்லை. மனைவியார் அவரை நின்று தேநீர் அருந்திச் செல்லுமாறு எவ்வளவோ பணிவுடன் கேட்டார். குப்புசாமி மறுத்துவிட்டார். மிகமிக அவசியமான கருமம் அம்மா என்று சொல்லி அன்று மாலையே புகையிரதம் ஏறி, இமாசலம் சென்று விட்டார்.

சரஸ்வதி என்ற பெயருடைய குரு ஒருவரிடம் உபதேசம் பெற்று சாதனைகள் செய்யத் தொடங்கினார். குரு உபதேசம் பெற்ற பின் குப்புசாமி சிவானந்தர் ஆனார். ரிஷிகேசம் சென்று கடுந்தவம் செய்தார். ரிஷிகேசத்தின் சுவர்க்காச்சிரமம் என்ற இடத்தில் தவக்குடில் ஒன்றமைத்து கடுந்தவம் ஆற்றினார். தவத்தோடு சேவையும் செய்தார். யாத்திரிகர்களுக்கு சேவை செய்தார். கேதார், பத்திரி செல்லும் யாத்திரிகர்களுக்கு வேண்டி ய சேவை செய்து வந்தார். இரவு முழுவதும் தியானம் செய்வார். பகல் முழுவதும் சேவை செய்வார்.

தனது சேவையை உலகம் முழுவதற்கும் பொதுமையாக்கி நிரந்தர சேவையில் ஈடுபடவேண்டும் என்று கருதி, ரிஷிகேசத்தில் ஆனந்தக் குடீரம் என்ற ஓர் ஆச்சிரமம் அமைத்து பணியைத் தொடங்கினார். பல சீடர்கள் அவரை நாடி வந்தனர். எல்லாரையும் பணி செய்ய உலகம் முழுவதும் அனுப்பினார்.

திவ்ய ஜீவன சங்கம் என்ற பெயருடன் உலகம் முழுவதற்கும் பொதுவான ஒரு அமைப்பு ஏற்படுத்தினார். மிகக் குறைந்த காலத்திலே உலகம் முழுவதிலும் ஐந்நூற்றுக்கும் அதிகமான திவ்ய ஜீவன சங்கக் கிளைகள் ஏற்படுத்தப்பட்டன. மணியான சீடர்கள் அப்பணிகளை மேற்கொண்டனர்.

ஆச்சிரமத்தில் இலவச வைத்தியசாலை ஒன்று ஏற்படுத்தி அங்கேயே பல ஆயுள் வேத மருந்துகளை உற்பத்தி செய்தனர். பல நோய்களுக்கும் மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டன. அச்சகம் ஒன்று அங்கேயே ஏற்படுத்தப்பட்டது. சுவாமிகளுடைய முன்னூற்றுக்கு மேலான நூல்கள் அச்சு வாகனம் ஏறி உலகம் முழுவதும் பரவின. சுவாமியினுடைய உபதேசங்களில் ஒன்று கொடு, கொடு கொடுத்துக்கொண்டே இரு என்பதாகும். சுவாமி உபதேசத்துடன் நின்று விடவில்லை. ஆச்சிரமத்திற்கு வருவார்க்கெல்லாம் அவர்கள் தூக்கக் கூடிய அளவுக்கு அவரது நூல்களை இனாமாகக் கொடுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சுவாமிகளைத் தரிசிக்க வேண்டும் என்ற அவா உள்ளத்தே எழுந்தது. அதற்கேற்றாற் போல் சிவானந்தமண்டலி என்ற பெயருடன் ஒரு யாத்திரைக் கோஷ்டி சென்னையிலிருந்து புறப்பட்டது. அதில் நாங்கள் மூவர் ஈழத்திலிருந்து சேர்ந்து கொண்டோம். மொத்தமாக ஒரு புகையிரதப் பெட்டியில் 108பேர் பிரயாணம் செய்தோம். சுவாமி பரமானந்தர் எங்களுடன் எங்களுக்கு வழிகாட்டியாக வந்தார். ஆனந்தமான யாத்திரை. வழிநெடுகிலும் பஜனை. அந்தப் பஜனையை வாழ்நாள் முழுவதும் கேட்டுக்கொண்டு இருக்கலாம் போல் தோன்றியது. தங்கும் இடமெல்லாம் தெய்வீக வரவேற்பு. பல தலங்களையும் தரிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ரிஷிகேசம் புகையிரத ஸ்தானத்திலிருந்து பஸ் வண்டிகளில் சென்றோம். எங்கள் யாத்திரைக் கோஷ்டி சென்ற போது சுவாமி சிவானந்தர் மலைபோல் நின்று வரவேற்றார். அவரைக் கண்டதும் பின்வரும் பாடல் நினைவுக்கு வந்தது.

கங்கையைப் போல தெளிந்த நல் உள்ளம்
  கருணைமா முகிலெனத் தோற்றம்
திங்களைப் போல நிலவிடும் சாந்தம்
  தினகரன்போல் ஒளிர் ஞானம்
தங்கமே அனைய சாதுக்களுடனே
  சதா ஆனந்தக் குடிலில் வேதாந்தச்
சிங்கமே போன்று பிரணவ கர்ஜனை செய்
  சிவானந்த ஜோதியைப் பணிவாம்.

அவர்தாள் பணிந்தோம். பிரசவம் ஆனோம். கண்டறியாதன கண்டோம். எங்களுக்கென்று வகுத்த குடீரங்களுக்குச் சென்றோம். இலங்கையில் இருந்து சென்ற மூவருக்கும் ஒரு குடீரம். ஒருவர் சிவதொண்டன் செல்லத்துரை சுவாமிகள். அடுத்தவர் இலங்கை வங்கி மனேஸராய் இருந்த சிவஞானசோதி அவர்கள். நாங்கள் மூவரும் மிக மகிழ்வுடன் அக்குடீரத்தில் தங்கினோம். எங்களுக்குத் தொண்டு செய்வதற்கு முழங்காலுக்கு மேல் ஒரு துண்டுக் காவி கட்டிய ஒருவர் வந்து எல்லாப் பணிகளும் செய்தார். உடை கழுவுவதற்கு இரக்கா என்று கேட்டார். நல்ல காலம் நாங்கள் இல்லை என்றோம். ஏன் நல்ல காலம் என்பதைப் பின்னால் அறிவீர்கள்.

அங்கு விசுவநாதர் ஆலயம் ஒன்று இருக்கிறது. அங்கு இரவு பகலாக அகண்ட நாம பஜனை நடந்து கொண்டிருக்கிறது. கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலாக இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஹரே ராம ஹரே ராம ராமராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

இந்த மகா மந்திரம் இன்றும் இரவு பகலாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. நாங்கள் 108 பேரும் அதில் கலந்துகொண்டோம். அந்தப் பஜனை மண்டபத்து ள் புகும்போதே அந்த மகாமந்திர அலைகளுக்குள் நாம் இருப்பதை உணரமுடிந்தது.

இருபத்து நான்கு சீடர்கள் மாறி மாறிப் பங்கு பற்றுகிறார்கள். ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் இருவர் இருவராகப் பங்கு பெறுகிறார்கள். ஒருவர் சொல்லிக்கொடுக்க மற்றவர் திருப்பிச் சொல்வார். கலந்துகொள்பவர்கள் எல்லோரும் அவர்களையே பின்பற்றுவார்கள். அந்த மந்திர அலையிலே வைக்கப்படும் விபூதிப் பிரசாதத்தை மாதம் தோறும் உலகெங்கும் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

கிச்சடி என்ற சொல்லும் அதற்குரிய பொருளும் ஆச்சிரமத்தில் தான் அறிய முடிந்தது. மத்தியானம் மீதிப்படும் சோறுகறி எல்லாவற்றையும் ஒரு கிடாரத்தில் போட்டு அவிய விடுவார்கள். அது கஞ்சி போன்று காணப்படும். அதனை இரவுக்குப் பயன்படுத்துவார்கள். அதனைத்தான் கிச்சடி என்று கூறுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு ஏழேகால் மணிக்கு எல்லோருக்கும் இரவுணவு கிடைத்தது. அது சாப்பிட்டுச் சிறிது ஆறுதல் எடுத்ததும் இரவு எட்டு மணிக்கு சத்சங்கம் நடைபெறும். சுவாமிகள் தலைமை தாங்குவார்கள். சீடர்களும் பேசுவார்கள். அங்கு வருபவர்களும் பேசுவார்கள். கடைசியாகச் சிதானந்தஜீ பேசுவார் என்று சுவாமிகள் கூறினார்கள். யார் என்று பார்த்தோம். எங்கள் குடீரத்தைத் துப்புரவு செய்து நேரத்திற்கு நேரம் தண்ணீர் எடுத்து வைத்தாரே; அவர்தான் எழுந்து வந்தார்.

அவர்தான் சுவாமி சிவானந்தரின் முதலாவது சீடர் அவர்தான். அப்பொழுது ஆச்சிரமத்தை நிர்வகிக்கும் காரியதரியாக இருந்தவர். சுவாமியின் மறைவின் பின் சுவாமி சிதானந்தஜீ தான் ஆச்சிரமத் தலைவர் ஆகி உலகம் எல்லாம் சென்று தொண்டு புரிகின்றார்.

அவர் வாயைத் திறந்ததும் முத்துமுத்தாக வார்த்தைகள் சொரிந்தன.சுவாமிகள் வார்த்தைகளைத் தேடிச் செல்லவில்லை. சொற்கள்தான் சுவாமியைத் தேடிச் சென்றன. இத்தகைய ஒருவர் எங்கள் குடீரத்தில் எமக்குத் தொண்டு செய்ய வந்தாரென்றால் அவரது பணிவையும் சேவை மனப்பான்மையையும் எம்மால் அளவிட்டு உரைக்க முடியுமா?

சுவாமி சிவானந்தர் சிதானந்தஜீயைப் பற்றி ஒரு இடத்தில் எழுதும் போது நாம் எல்லாம் பிறந்து சந்நியாசி ஆனோம். ஆனால் சிதானந்தஜீயோ சந்நியாசியாகவே பிறந்தார் என்று குறிப்பிடுகின்றார்.

சுவாமி சிதானந்தர் ஒரு தாசில்தார் குடும்பத்தில் பிறந்தவர். பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். வீட்டில் வேலை ஆட்களுக்கோ குறைவில்லை. இவரது மனம் துறவை நாடியது. இவரது மனோநிலையை யாரும் உணர்ந்தாரில்லை. இவரது தாயாருக்கு ஒரே ஒரு ஆசை. மகன் ஒரு பட்டதாரியாக வரவேண்டும் என்பதுதான் அந்த ஆசை. தாயார் தனது ஆசையை மகனிடம் தெரிவித்தார். தாயாருடைய ஆசையைத் திருப்தி செய்வதற்காக B.A பரீட்சைக்குப் படித்தார். அந்த மாகாணத்திலேயே முதலாவதாகத் தேறினார். B.A சித்தி அடைந்த தராதரப் பத்திரத்தைத் தாயாரிடம் கொண்டு சென்று கொடுத்தார். தாயார் மகிழ்ச்சியில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

இவர் அடுத்தநாளே யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் ரிஷிகேசம் போய்ச் சேர்ந்தார். சுவாமி சிவானந்தருடைய அரவணைப்பில் வாழ்ந்தார். சிதானந்தஜீ தமக்குச் சிஷ்யனாகக் கிடைத்தது தான் செய்த தவம் என்று சிவானந்தர் பகிரங்கமாகக் கூறினார். சிவானந்தர் உலகச் சுற்றுப் பயணம் செய்தவர் என்றாலும், சிவானந்தர் மூலமூர்த்தியாகவே இருக்கச் சிதானந்தஜீ உற்சவ மூர்த்தியாகி உலகமெல்லாம் வலம் வந்துகொண்டிருக்கிறார். சிதானந்தஜீ ஆச்சிரமத்தில் இருக்கும் நாட்கள் மிகக் குறைவு. வெளியே போகும் நாட்கள்தான் மிக அதிகம்.

சுவாமி சிவானந்தர் அடியேனை முத்தையாஜீ என்றே அழைப்பார். இருமுறை ஆச்சிரமத்தில் சென்று தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. ஒருமுறை இலங்கையில் சுவாமிகளின் திக்விஜயத்தின் போது தரிசிக்கும் பாக்கியமும் பெற்றேன்.

ஒருமுறை சுவாமி அடியேனைப் பார்த்து எத்தனை ஆத்மஜோதி வெளியிடுகிறீர்கள் என்று கேட்டார். அடியேன் இரண்டாயிரம் பத்திரிகைகள் என்றேன். 'மாவலஸ்' என்று முதுகில் தட்டினார். ஏன் சுவாமி என்றேன். 2000 பத்திரிகை வெளியானால் 20000 பேர் ஆத்மஜோதி வாசிக்கிறார்கள் என்று கூறினார்.

சுவாமிகளின் இமயமலை போன்ற தோற்றத்தையும் அவரது இனிய வார்த்தைகளையும் இப்போது நினைத்தாலும் உடம்பு புல்லரிக்கிறது.

(தொடரும்........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்

(தொடர்ச்சி ........)

***தியானத்திற்கு முட்டுக்கட்டைகள்***

தியானத்தை ஏன் மனிதன் பழகவேண்டும்?

இது அவசியமா

கம்ப்யூட்டர் யுகத்தில் –

இதுவெல்லாம் தேவை தானா?

தியானத்தினால் என்ன பிரயோஜனம்?

இன்றைய பரபரப்பான சூழ்நிலையில் இந்தத் தியானமுறை மனித வாழ்க்கையில் அப்படியென்ன மகத்தான காரிய சாதனையை விளைவித்து விடப் போகிறது? என்று எண்ணலாம்.

நிச்சயமாக, மாபெரும் மகத்தான ஒரு பின் விளைவையும் மாறுதலையும் உண்டாக்கியே தீரும்.

மன அமைதியே மாபெரும் மாறுதல்

தொடர்ந்த தியானம், மனத்தில் எழக்கூடிய ஒழுங்கில்லாத எல்லாவித எண்ணங்களையும் ஒழுங்குபடுத்துகிறது.

எண்ணங்கள் எனப்படுவது ஒருவகைப்பட்ட காந்த அலைகள் தான்.

இந்த எண்ண அலைகளைத் தியானம் ஒழுங்குபடுத்தி ஒருவரை முறைக்குள் கொண்டு வந்து மனத்தை அமைதிப்படுத்தப் பெரிதும் முயலுகிறது.

இதன் இடைவிடா முயற்சி காரணமாக மனமானது ஒழுங்கடைகிறது. இந்த அமைதியை மனம் பெறுவதற்குத் தியானம் பேருபகாரமாக இருக்கிறது.

தியானம் செய்யும்முன் அல்லது பயிற்சியைச் செய்து வருகையில் கடைப்பிடிக்க வேண்டியவை.

தியானம் செய்யும் ஒருவர் –

அல்லது தியானத்திற்காகப் பயிற்சியை ஆயத்தம் செய்யும் ஒருவர் –

அல்லது தியானப் பயிற்சியை நடைமுறையில் கைக்கொண்டிருக்கும் ஒருவர் –

கடைப்பிடிக்க வேண்டிய விஷயங்களில் தலையாயது எது தெரியுமா?

மௌனம்.

ஆம், மௌனம் தான்!

எவரிடமும் வீண் பேச்சுப் பேசவேண்டாம். விதண்டாவாதம் பண்ண வேண்டாம் –

வாக்கு வாதங்களில் ஈடுபடவேண்டாம்.

நீளமான புத்திமதிகளையோ, தொடர் பேச்சுகளிலோ ஈடுபடவேண்டாம்.

நண்பர்களுடன் சேர்ந்து நீண்ட நேரம் மணிக்கணக்காக அளவளாவிக் கொண்டிருக்க வேண்டாம்.

கோபக்கனல் உள்ளத்தில் கழன்றெழ கண், மூக்கு தெரியாமல் பிறரைக் கண்டபடி பேசவேண்டாம்.

அறிவுபூர்வமாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு ஆழமான விஷயங்களை ஆராய்ச்சி ரீதியாகப் பேசிக்கொண்டிருக்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள, வள, கொழ, கொழ என்று உங்களை நாடி வருபவர்களிடம் பேசிக்கொண்டிருக்க வேண்டாம்.

### தியானத்திற்கு முட்டுக்கட்டைகள்

இவ்வாறான பேச்சுக்கள் தியான வாழ்க்கை வாழ எண்ணுவோருக்கு ஒரு முட்டுக் கட்டையாகும்.

நீங்கள் எவ்வளவுதான் அறிவார்ந்த பேச்சுக்களைப் பேசுபவராக இருந்தாலும் – அந்தப் பேச்சுக்கள் உங்கள் மனத்தின் சமநிலையை இழக்கச் செய்துவிடும்.

அது மட்டுமல்ல மனத்தையும் பெரிய அளவில் குழப்பிவிட்டு விடும்.

தியான வாழ்க்கையில் நலம் பெறப் போகும் பயன்மிக உயர்ந்தது. அதனைப் பேச்சினால் சாதிக்க முடியாது.

அல்லது சிந்திக்கவைக்க முடியாது.

எனவே வீணான பேச்சுக்கள் பேசுவதை விட்டு விடுங்கள்.

எந்த அளவுக்குப் பேச்சைக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குப் பேச்சைக் குறைத்து விடுங்கள்.

பேச வேண்டும் போலத் தோன்றினால் ஆத்ம ஞானத்தை அடைந்திருக்கக் கூடிய பெரிய பெரிய மகான்கள், ஞானிகள் ஆகியவர்களினால் இயற்றப்பட்ட நல்லறிவைப் புகட்டக் கூடிய நீதி நூல்களையே படித்து வாருங்கள்.

### அதி நவீனத் தியானம்

தியானம் என்ற சொல் இன்று பட்டி தொட்டியிலிருந்து பட்டினம் வரை பிரபலமாகிவிட்டது. தியானம் செய்வது நல்லது என்று மருத்துவர் சிலர் கூட அபிப்பிராயப்படுகின்றனர்.

ஆனால் ஆரம்பநாளில் இந்தத் தியானம் எல்லோராலும் பின்பற்றப்படவில்லை. பக்குவப்பட்ட மனத்தை அடைய, உயர்ந்த சான்றோர்களால் மட்டுமே பின்பற்றப்பட்டு வந்தது.

இன்றோ, எல்லோருமே தியானம் செய்கிறோம் என்று கூறுமளவுக்குத் தங்களை உயர்த்திக் கொண்டுவிட்டார்கள்.

இதன் காரணமாகக் கொடியவர்களும், கொள்ளைக்காரர்களும், கருமிகளும், கஞ்சிக்கு வழியில்லாத கடைந்தெடுத்த ஏழைகளும், பணக்காரர்களும் பண்பைக் கிலோ என்ன விலை என்று கேட்பவர்களும் கூட தியானத்தைச் செய்கிறோம் என்று சொல்லுமளவுக்கு முன்னேறிவிட்டார்கள்.

இதன் காரணமாக ஆரம்ப நிலைத் தியானங்களிலிருந்து தற்போதைய தியானம் நவீன மயமாக்கப்பட்டுவிட்டது.

### தியானத்தின் மாபெரும் இரு பிரிவுகள்

இன்று உலகம் முழுவதிலும் தியானம் பற்றித் தெரியாதவர்களே இல்லை என்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டு விட்டது.

இந்தத் தியானம் இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு சொல்லும் போது தியானம் செய்ய நினைப்பவர்களும் –

தியானம் செய்து கொண்டிருப்பவர்களும் –

தியானத்தைப் பழக்கித் தருபவர்களும் கூட ஆச்சரியப்படலாம்.

ஆம், உண்மைதான். இந்தத் தியானங்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்க வேண்டியது நம்முடைய கடமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. லௌகீக தியானம்
2. ஆத்மார்த்த தியானம்

இதில் இந்த லௌகீக தியானம் எனப்படுவது உலகியலில் வாழும் மக்கள் தங்களுடைய சுயநலம் கருதிச் செய்யப்படும் தியானம் என்று சொல்லலாம்.

ஆத்மார்த்த தியானம் எனப்படுவது நம்முடைய ஆத்மாவுக்கு உயிருக்கு ஜீவனுக்கு நாம் நம்மையறியாமல் நன்மை செய்தவர்களாகி இறைவனிடம் கலப்பதற்கு உதவுகிறது.

ஆழ்ந்து யோசிக்கும் போது இதிலும் சுயநலம் இருப்பது போன்ற பாவனை உருவாகும்.

ஆனால் அது வெறும் பாவனைதான். அதில் உண்மையில்லை.

லௌகீக தியானம் பற்றி அறிவோம்

இந்த லௌகீக தியானத்தின் காரணமாக நம்முடைய உடல் ஆரோக்கியமாக விளங்குகிறது. மனத்தின் நலமும் காப்பாற்றப்படுகிறது.

இந்த இரண்டு வகைப்பட்ட நலன்களைப் பெறுவதற்காக மட்டுமே செய்யப்படுவது லௌகீக தியானம் ஆகும்.

இத்தகைய தியானத்தை தியானம் என்ற பெயரிலே உலகத்தினர் அழைத்த போதிலும், அது தியானம் என்ற சொல்லுக்கு உரியதன்று.

இவ்வகைப்பட்ட பயிற்சியை, மன ஒருமைப்பாட்டுப் பயிற்சி என்றே குறிப்பிட வேண்டும்.

கான்ஸன்ட்ரேஷன் என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள்.

உண்மையான தியானத்தை மட்டும் ஆங்கிலத்தில் த்யானா என்று குறிப்பிடுவார்கள்.

சிலர் மெடிட்டேஷன் என்று சொல்வதுண்டு. உண்மையில் மெடிட்டேஷன் என்பது வேறு.

அது ஆழ்நிலைத் தியானம் என்று பொருள்படும். ஆத்மீக ரீதியாகச் சொல்லப் போனால் நிர்விகல்ப சமாதி என்று கூடச் சொல்லலாம்.

தவறான அர்த்தங்களைச் சரியாக நினைத்துக்கொண்டு முரணாகப் பேசுவதாலேயே இத்தகைய விபரீதங்கள் நிகழ்கின்றன.

## லௌகீக தியானத்தின் நன்மையான விளைவுகள்

இவ்வகைப்பட்ட மன ஒருமைப்பாட்டுப் பயிற்சியை லௌகீக தியானம் என்ற பெயரில் நாம் அழைக்கும் போது –

அவ்வகைப்பட்ட தியானங்கள் நமக்கு என்ன நன்மையான விளைவுகளைத் தரும்?

1. மனிதன் தொடர்ந்து இவ்வகைப்பட்ட பயிற்சியைச் செய்து வரும் போது அவனுடைய உடலை நல்ல நிலையில் வைத்திருக்கச் செய்கிறது.
2. உடலில் ஓடக்கூடிய இரத்தத்தின் அழுத்தச் சக்தியைக் குறைத்துச் சீராக்குகிறது.
3. மனத்திற்கு ஏற்படும் உளைச்சல்களைத் தீர்த்து வைக்கிறது.

இவ்வகைப்பட்ட உண்மைகளை இன்றைய கம்பியூட்டரே கணித்துச் சொல்லியிருக்கிறது.

விஞ்ஞானிகள் பலரும் ஒப்புக்கொண்டுள்ளனர். இதன் விளைவு, அல்லது எதிரொலிதான் உலகம் எங்கும் தியானம் பற்றிய விழிப்புணர்ச்சி –

அல்லது மறுமலர்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிப் பாருங்கள்

மனிதன் பிரச்சினைகள் உள்ளவன். எனவே பிரச்சினைகள் மட்டும்தான் அவன் கண்களுக்குத் தெரியும்.

பூதாகாரமாக விரியும்.

ஆனாலும், மனிதன் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மட்டுந்தானா தியானம்?

தியானத்தின் இலக்கே இவ்வளவு தானா?

இல்லை –

என்றாலும், மனிதன் தனக்குள்ளேயே ஒரு வட்டத்தைப் போட்டுக்கொண்டு அந்த வட்டத்துக் குள்ளேயே தன்னுடைய பிரச்சினைகளைச் சிக்கவைத்து –

அந்த வட்டத்துக்குள்ளேயே அதை எதிர்த்து நிற்கவே இந்தத் தியானம் என்ற மிகப் பிரம்மாண்டமான பிரும்மாஸ்திரத்தை எடுக்கிறான்.

அங்கே தான் அவன் சுயநலம் ஆரம்பிக்கிறது. விஸ்வரூபம் எடுக்கிறது. அதற்குள்ளேயே முடிந்தும் போய் விடுகிறது.

ஆனால் உண்மை நிலை என்ன?

ஆத்மார்த்த தியானமே உண்மையானது.

ஆத்மார்த்த தியானம் என்பது என்ன?

வேதாந்த ரீதியில் இதனை நாம் விளக்கப் புகுந்தால் இதன் பெயரே வேறு தான்.

உபாசனை என்பதே இதன் விளக்கம்.

இந்த உபாசனையின் உண்மையான இலக்கு என்பது என்ன தெரியுமா?

ஆன்மீக விழிப்புணர்ச்சி என்று சொல்லலாம். இதையே வேறு மாதிரியாகவும் கூறலாம்.

ஆத்மீக ஒளி

இந்த உபாசனையும் இரண்டு பெரும் நெறிகளுக்குக் கீழே பக்குவப்படுத்தப்படுகின்றன.

அவை –

1. பக்தி நெறி என்றும் –
2. ஞான நெறி என்றும் விளக்கப்படும்.

பக்தி நெறியில் உருவ உபாசனையே முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

ஞான நெறியில் அருவ உபாசனையே முக்கித்துவம் வாய்ந்தாக அமைகிறது.

உருவ உபாசனையின் மூலம், உருவத்தை அதாவது தனக்கு இஷ்டமான தெய்வத்தை ஒருவன் தியானிக்கிறான்.

அருவ உபாசனையில் உருவமற்ற ஒளியையோ வெற்று வெளியையோ அவன் தியானிக்கின்றான்.

இவை இரண்டுமே ஆத்மீகத் தியானத்தின் இரண்டு விதமான படிகள் ஆகும்.

(தொடரும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபானந்தவாரியார் சுவாமிகள்

## தொடர்....

உவகையொடு கிர்த்திகையர் அறுவரும் எடுக்க அவர்
ஒருவர் ஒருவர்க்கு அவனொ ரோர்புத்ரன் ஆனவனும்
– திருவகுப்பு –

அங்ஙனம் பிரிந்த ஆறு திருக்குழந்தைகளையும் கார்த்திகை மகளிர்கள் மிகவும் மகிழ்ந்து எடுத்து தங்கள் தங்கள் முலைப்பாலை ஊட்ட, முருகப்பெருமான் திருமுறுவல் செய்து, நீங்காத பேரருளால் அருந்துவார்போல் அருந்தினார். பாலருந்திய பரஞ்சுடர் முதல்வனை அக்கார்த்திகைப் பெண்கள் வண்டருந்தாத கஞ்சமாமலர்ச் சயனத்தில் சேர்த்துத் தாலாட்டிக் கண்வளரச் செய்து துதித்தார்கள். குமாரக்கடவுள் திருவருளினாலே துயில் செய்ய ஒருருவமும், துயில் செய்து துண்ணென எழுந்து மதலை மொழிபேச ஓருருவமும், மாதாவின் முலைப்பாலைச் செம்பவள வாய் வைத்து உண்ண ஓருருவமும், நகை செய்து கொண்டிருக்க ஒருருவமும் விளையாடிக்கொண்டிருக்க ஒருருவமும் காரணமின்றியே அழுது கொண்டிருக்க ஓருருவமும் உடையாராயினார்.

தவழ ஓருருவமும், தளர் நடையிட்டுச் செல்ல ஒருருவமும் , நில்லாது விரைந்து எழுந்து விழ ஒருருவமும், இருக்க ஒருருவமும் அச்சரவண தடாகம் முழுதுங் கலக்க ஒருருவமும் தாயாரிடத்தில் இருக்க ஓருருவமும் உடையராயினார்.

கூத்தாட ஓருருவமும் செய்கை கொட்ட ஓருருவமும் இனிய பாடல்களைப் பாட ஒருருவமும் அந்த ஆடலைப் பார்க்க ஒருருவமும் ஓட ஒருருவமும் ஓரிடத்தில் ஒளிக்க ஒருருவமும் அப்படி ஒளித்த மகவைத் தேட ஒருருவமுமாக உடையாராயினார்.

ஆடவோர் உருவம் செய்கை அறையவோர் உருவம் நின்று
பாடவோர் உருவம் நாடிப் பார்க்கவோர் உருவம் ஆங்கண்
ஓடவோர் உருவம் ஓர்பால் ஒளிக்கவோர் உருவம் யாண்டும்
தேடவோர் உருவம் ஆகச் சிவன்மகன் புரிதல் உற்றான்.

இவ்வாறு ஆறுதிருமேனியும் ஒரு கணத்திற்குள் ஆயிரக்கணக்கான பேதமாம் வண்ணம் முழுமுதற் கடவுளாகிய முருகப்பெருமான் உயிர்கள் தோறும் ஆடல் போல் எண்ணிலாத அற்புதத் திருவிளையாடல்களைப் புரிவாராயினார்.

''சிற்பரனாகி வந்த செவ்வேளது திருவிளையாடலின் பற்பல திறமும் நோக்கிய நாரயணனும் நான்முகனும் இந்திரனும் இருடியரும் பிறரும் அற்புதமும் ஆனந்தமும் அடைந்து, இவ்வொருபாலரே பல சிறுவர் வடிவங்கொண்டு நம்முன் கணப்பொழுதிற்குள் எண்ணிலாத பேதத்தராயினார். இதனை ஆராயுங்கால் இக்குமாரசுவாமியுடைய திருவிளையாடல் எங்களாலும் அறிவரியது. கைக்குழந்தை போலத் தோன்றிய இவர் செய்யும் இம்மாயைபோல ஒருவரும் செய்ய வல்லவரல்லர். பிறிது சொல்லி என்ன பயன்? நாமும் இவ்வாறு செய்ததொன்றில்லை. இவர் உயர்வொப்பில்லா சிவபெருமானேயாம் என்று சொல்லி வணங்கி நின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகைப் பெண்கள் அறுவரும் அறுமுகக் கடவுளின் ஆடல்களை நோக்கி, மிக்க வியப்புற்று, குழந்தைகளென்ற எண்ணத்தை ஒழித்துச் சிறிதும் பிரியாது அஞ்சி வழிபடு கடவுளாகவே கொண்ட மெய்யன்போடு துதித்தார்கள்.

## நவவீரர் உற்பவம்

ஆலமுண்ட அரனாரது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய அக்கினிப் பொறிகளின் வெம்மையைத் தாங்காது உமாதேவியார் தமது திருவடிகளிலுள்ள சிலம்புகள் தாக்கலால் நவரத்தினங்கள் சிதறும் வண்ணம் அஞ்சி ஓடினார். மாலயனாதி வானவர்கள் சிவபெருமானை வணங்கி, நீர் ஒரு திருக்குமாரரைத் தந்தருளும் என்று வேண்ட சிவபெருமான் தமது நுதல்விழியினின்று தீப்பொறிகளைத் தோற்றுவித்து ஒரு குமரனாய் வளரும் வண்ணம் சரவணப் பொய்கையிலே சேர்ப்பித்தருளினார் என்றுணர்ந்தார்.

அதன்பின் அரனாருக்குக் குமாரன் என்னிடத்தே தோன்றா வண்ணம் செய்த திருமால் பிரமன் இந்திரன் முதலிய இமையவர்களுடைய பன்னியர்களுக்கெல்லாம் புதல்வர்கள் இல்லாதொழிக என்றார். மீண்டு சிவ சந்நிதியையடைந்து தமது நெற்றிக்கண்ணில் தோன்றிய நெருப்புப் பொறிகளின் வெம்மையைக் கண்டு உடல் வெதும்பி ஓடினேன். நீர் அவற்றை இவ்விடத்தினின்றும் அகற்றினமையால் மீண்டேன் என்று விண்ணப்பஞ் செய்ய கண்ணுதற் கடவுள் கருணை செய்து தேவியாரைத் தம்பக்கத்தில் இருத்தி அருளினார்.

உமாதேவியார் முன் ஓடியபொழுது அவருடைய பாதச் சிலம்பினின்றும் சிதறிய இரத்தினங்களெல்லாம் சிவமூர்த்தியின் திருமுன் விளங்கின. அரனாரது ஆணையினால் அந்நவமணிகளினின்றும் அம்பிகையின் திருவுருவந் தோன்றியது. அவ்வுருவங்களைச் சிவபெருமான் நோக்கி திருவருளினால் 'வாருங்கள்' என்று திருவாய் மலர்ந்தருள ஒவ்வோர் இரத்தினத்துக்கு ஒவ்வொரு சக்தியாக நவசக்திகள் தோன்றினார்கள். அவர்கள் முக்கண்மூர்த்தியின் முளரியந்தாளை வணங்கி நின்று அவரிடத்தே விருப்பம் வைத்தமையால் இருடி பத்தினிகள் போல் விரைவிலே கருப்பம் உற்றார்கள். இவை யாவையும் பார்வதியம்மையார் கண்டு அந்நவசக்திகளின் மீது சினந்து நீங்கள் நமக்கு மாறாயினமையால் இக்கருப்பத்துடன் பலகாலம் இருக்கக் கடவீர்கள் என்று சபித்தனர்.

அப்பொழுது நவசக்திகள் அஞ்சி நடுநடுங்கி உடல் வெயர்த்தனர். அவ்வெயர்வை யினின்றும் தேவ தேவனது திருவருளால் தினகரத்தொகைபோல் இலட்சம் வீரர்கள் உதித்தார்கள். அவ்வீரர்கள் இடியேறு அனைய சொல்லை உடையவர்களும் பொன்னாடையை உடுத்தவர்களும் வாளையும் வரிசையையும் கரத்தில் எந்தியவர்களுமாய் கண்ணுதற் கடவுள் முன் சென்று திருவடிகளை இறைஞ்சித் துதித்து நின்றார்கள்.

எம்பெருமான் அவர்களை நோக்கி நம் மைந்தர்களே கேண்மின் அமரர்களுக்குப் பகைவர்களாகிய அவுணர்களை அழித்தற் பொருட்டு நமது புதல்வனாகிய முருகவேளுக்கு நீங்கள் யாவரும் படைகளாகக் கடவீர்கள் என்று கூறியருளினார்.

அவ்விலக்க வீரர்களும் நாடோறும் பேரன்புடையவர்களாய்ச் சிவசந்நிதியை அகலாது திருத்தொண்டின் வழி நின்றார்கள்.

பார்வதியம்மையாற் சபிக்கப்பட்ட நவசக்திகள் நடுநடுங்கி மலைவளர் காதலியை மன மொழி மெய் கருணங்களால் வழிபாடு செய்துகொண்டு கருப்பத்தோடு பலகாலம் இருந்தார்கள். அந்நவசக்திகளுடைய கருவினுள்ளே நந்தி கணத்தவர்கள் குழவிகளாய்ப் புகுந்து காளையர்களாகி சிவபெருமானைச் சிந்தித்துத் தொழுதுகொண்டிருந்தார்கள்.

அவர்கள் இங்ஙனம் சிவயோகஞ் செய்துகொண்டிருந்ததால் கருப்பம் மிகப்பாரமாதலும்; நவசக்திகள் பார்வதி பரமேசுவரரைப் பணிந்து அடியேங்கள் இந்நாள்காறும் இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பத்தினால் வருந்தினோம்; இனித் தாங்கலாற்றோம்; திருவுளம் இரங்கி அருளல் வேண்டும் என்று குறையிரந்தனர்.

தழல் விழிப்பரமன் தண்ணருள் புரிந்து மலைமகளது மலர் முகத்தை நோக்கி ஏலவார் குழலியே நின்காற் சிலம்பினின்றும் உதித்த இந்நவசக்திகள் நின் சாபங் காரணமாக நெடுங்காலம் கருப்பத்தைச் சுமந்து மிகுந்த துன்புற்றார்கள். இனிப் புதல்வரைப் பெறத் திருவருள் செய்க என்று பணித்தருளினார்.

அம்பிகை 'நன்று' என்று அதற்கியைந்து புன்முறுவல் பூத்து நவசக்திகளை நோக்கி 'இனி நீங்கள் ஆற்றலிற் சிறந்த அரும்புதல்வர்களைப் பெறக் கடவீர்கள்' என்று திருவாய் மலர்ந்தருள அவர்கள் வயிற்றினுள் யோகஞ் செய்துகொண்டிருக்கும் வீரர்கள் அதனை அறிந்து யோகத்தை விடுத்து மனமகிழ்ந்து கறைமிடற்று அண்ணலாரது கருணையை நினைந்து தொழுது பிறக்கும் பொருட்டு நினைந்தார்கள்.

நவசக்திகள் நானாம்பிகையின் கருணை நிறைந்த திருமொழியைக் கேட்டலும் கவற்சி நீங்கி அம்மையாரையும் அரனாரையும் வணங்கி வாழ்த்தி விடைபெற்றுக்கொண்டு அங்கு நின்று நீங்கி ஓரிடத்திற் சென்று புதல்வரைப் பெற்றார்கள்.

மாணிக்கவல்லியிடத்து தீரமிக்க வீரவாகு தேவரும் மௌத்திகவல்லியிடத்து வீரகேசரியும், புட்பராக வல்லியிடத்து வீரமகேந்திரரும் கோமேதவல்லியிடத்து வீர மகேச்சுரரும் வைடூரியவல்லியிடத்து வீரபுரந்தரும் வைரவல்லியிடத்து வீரராக்கதரும் மரகதவல்லியிடத்து வீரமார்த்தாண்டரும் பவளவல்லியிடத்து வீராந்தகரும் இந்திரநீலவல்லியிடத்து வீரதீரரும் அவதரித்தார்கள்.

இந்த வீரர்கள் ஒன்பதின்மரும் சிவபெருமானுடைய திருவருளினாலே தங்கள் தங்கள் அன்னையர்களது நிறத்தை உடையவர்களாய், பொன்னாடை உடுத்தவர்களாய், பலகாலம் வளர்ந்த உறுப்புகளோடும் நவசக்திகளுடைய உந்தியின் வழியே நான்முகக் கடவுளைப் போல் உதித்தார்கள்.

இவ்வண்ணம் உதித்த வீரர்கள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி எழுதலும் சிவமூர்த்தி அம்பிகையை நோக்கிப் புவனேஸ்வரீ! நம் மைந்தர்களாகிய இவர்கள் மிகுந்த அறிவுடையவர்கள்; ஆற்றலுடையவர்கள்; மானமாகிய அருங்கலமுடையவர்கள்; இவர்கள் புதியவர்களல்லர்; நந்திகணத்தவர்கள் என்று சொல்லியருளினார்.

தேவியார் அது கேட்டு அம்மைந்தர்களுக்குத் திருவருள் புரிந்தார். சிவபெருமான் அவர்கள் எல்லோருக்கும் தனித்தனி வாள் கொடுத்து ''ஓரிலக்க மைந்தர்களோடு நீங்களுங் கூடி உங்களுக்குத் தலைவனாகிய ஆறுமுகக்கடவுளை நீங்காது அவன் பணித்த தொண்டுகளைச் செய்துகொண்டிருக்கக் கடவீர்கள்'' என்று அருளிச் செய்ய அவர்களும் அதற்கியைந்து வணங்கினார்கள்.

இவ்வொன்பது வீரர்களும் இலக்க வீரரர்களோடு கலந்து எம்பெருமானுடைய திருக்கோயிலை அகலாது அங்கிருந்தார்கள். சக்திகள் ஒதின்மரும் உமாதேவியாரை நீங்காது அவர் பணித்த தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தார்கள்.

சிவபெருமான் சிவகாமசுந்தரியை நோக்கி ''உமையே! முன்னே நமது நெற்றிக்கண்ணில் தோன்றிச் சரவணைப் பொய்கையில் வளரும் உன் புதல்வனை நாம் இங்கே கொண்டு வருவோம் வா'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அகிலாண்ட நாயகி அது கேட்டு உவகையும் அன்புங் கொண்டெழுந்து ''எம்பெருமானே! நமது அருமந்த புதல்வனை நாம் கொண்டு வருவோம்; எழுந்தருளுக'' என்றார். உடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் எழுந்து இமவரை தந்த எம்பிராட்டியுடன் இடபமீது ஏறியருளினார். அது கண்ட இமையவர்கள் ''நம்முடைய தீவினைகளெல்லாம் கழிந்தன'' என்று உளமுவந்து நந்திகணத்தோடு அணைந்து துதித்தார்கள்.

ஆலாலசுந்தரர் முதலிய கணத்தவர்களும் உருத்திரர்களும் வந்து இருபக்கத்தும் நெருங்கித் துதித்தார்கள். ஞானாசாரியாகிய திருந்திதேவர் விடுப்ப திசைமுகன் திருமால், தேவர்கோமான் முதலிய தேவர்கள் பூமாரிபெய்து திருவடிகளை வணங்கிக்கொண்டு சூழ்ந்தார்கள். பூதர்கள் நானாவித வாத்தியங்களை முழக்கினார்கள். நான்கு வேதங்களும் பிரணவமும் பலகலைகளும் ஒலித்தன. விஞ்சையர்கள் கீதம் பாடினார்கள். சூரியர்கள் வெண்குடை பிடித்தார்கள். பூதர்கள் சாமரம் வீசினார்கள். நூறுகோடி பூதர்கள் சூழ்ந்தார்கள். இடபக்கொடிகள் நெருங்கிச் சென்றன. உமையம்மையாரோடு இடபமேற்கொண்ட முக்கட்பெருமான் திருக்கோயிலினின்றும் நீங்கிக் கயிலை மலையைக் கடந்து இமயமலைச் சாரலிலுள்ள சரவணப் பொய்கையை அடைந்தார்.

அம்மையும் அப்பரும் ஆறுமுகங் கொண்ட முருகக் கடவுளுடைய ஆடலின் தன்மையைப் பார்த்து உளம் பூரித்துத் திருவருள் செய்து சரவணப் பொய்கைக் கரையில் நின்றார்கள். அத்தடாகத்தில் ஆறு திருவுருவங்கொண்டு உலாவி வீற்றிருந்தருளும் குமாரக்கடவுள் அம்மையப்பரைக் கண்டு திருமுகமலர்ந்து திருவுளங்களித்தார்.

அப்பொழுது ஆலமுண்ட அண்ணல் அம்பிகையை நோக்கி ''நீ போய் உன் புதல்வனைக் கொண்டுவருவாய்'' என்று பணித்தருள பிராட்டியார் இடபத்தினின்றும் இறங்கித் திருவுளத்தெழுந்த பேரன்பின் பெருக்கால் விரைந்து சென்று சரவணப் பொய்கையில் எழுந்தருளியிருந்த தமது திருக்குமாரருடைய ஆறு உருவங்களையும் இரண்டு திருகரங்களாலும் அன்போடு எடுத்துத் தழுவி ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்ட ஒருருவம் ஆகும் வண்ணம் செய்தருளினார். அக்குமாரசுவாமி அம்பிகையால் ஆறு உருவமும் ஒன்றாகி கந்தர் என்னுந் திருநாமத்தைப் பெற்றார்.

பார்வதியம்மையார் தம்மாலே தழுவப்பட்ட குமரவேளுடைய முடிதோறும் மோந்து அழகிய முதுகைத் தடவலும் அவ்வம்மையாருடைய திருமுலைகள் சுரந்து பால் சொரிந்தன. ஆதி நாயகனது திருவருளாகியும் நிருமலமாகியும் பரஞானமாகியும் உள்ள தம்முடைய இளமுலைகள் பொழிந்த ஞானப்பாலை ஓர் இரத்தினவள்ளத்திலேற்று முருகக் கடவுளுக்கு ஊட்டினார். ஊட்டிய பின் அக்குமரக்கடவுளைக் கொண்டுபோய் எம்பெருமான் திருமுன்னே வணங்குவிப்ப பெருமான் தமது திருக்கரங்களினால் எடுத்து மார்பில் அணைத்துப் பெருங்கருணையோடு தமது மருங்கில் இருத்தினார். பின்பு எல்லா உலகங்களையும் ஈன்றருளிய பிராட்டியையும் திருக்கரத்தால் எடுத்துத் தமது இடப்பக்கத்தில் இருந்தியருளினார். அம்மையாருக்கும் அப்பருக்கும் இடையில் குமாரமூர்த்தி எழுந்தருளியிருந்தார்.

ஏல வார்குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பால னாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞாலமேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்
மாலை யானதொன்று அழிவின்றி வைகுமாறு ஒக்கும்.

இடபத்தின் மீது அரனாருக்கும் அம்பிகைக்கும் இடையே ஆறுமுகப்பெருமான் எழுந்தருளி இருத்தலைக் கண்டு பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய இமையவர்கள் கடல்போல் ஆரவாரித்து அணுகிப் பக்கத்தும் முன்னும் பின்னுமாக நெருங்கிச் ''சிவபெருமானுடைய நெற்றி நாட்டத்தினின்றும் தோன்றியருளிய குமாரசுவாமியே அடியேங்கள் சூரபன்மனால் மிகவும் வருந்தினோம். இனிச் சிறியேங்களை ஆட்கொண்டருளுக'' என்று விண்ணப்பம் செய்து பூமாரி பொழிந்து வணங்கி எழுந்து வாழ்த்தினார்கள்.

(தொடரும்........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்தூக்கிப் பார்ப்போம் – சிந்திப்போம் – செயற்படுவோம்!

*பேரறிஞர் முருகவே பரமநாதன் (கனடா)*

ஆயந்து, ஓய்ந்து பாராதவன் கருமம் தான் சாகக் கடன் என்பது அனுபவ மொழி. உசாவிக்கட்டாத கல்யாணமும், துளாவிக் காய்ச்சாத கூழும் சரிவராது. காய்தல் உவத்தல் இன்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கடன். முன்யோசனையுடன் எதனையும் மேற்கொள்ளல் உசிதம். அரசமைப்பிற் கூடத் திட்டமிடல், அமுல் நடத்தல் என்பன முன்னுரிமையானவை. பொதுவாழ்விலும் சரி, தனிநபர் வாழ்விலும் சரி, தாபன அமைப்பிலும் எண்ணித் துணியவேண்டும். துணிந்த பின் எண்ணுவது பொருந்தாது. வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும். திட்டமிட்ட செயற்பாடு தோல்வி காணாது. கண்டாலும் கண்காணிப்புக் குறைவால் சிறந்த வழிநடத்துகை இன்மையால் நட்டம் ஏற்பட்டிருக்கலாம். ஆதாயம் குறைவாய் அமையலாம்; மனிதம் சிந்திக்கும் திறமை வாய்ந்தது. பதறாத காரியம் சிதறாது. இக்கண்ணோட்டத்தில் நம் எதிர்கால விளைவுகளை சாதக, பாதகங்களை ஒவ்வொரு கருமங்களிலும் சீர்தூக்கிப் பார்த்தால் நல்ல பயன் அளிக்கும். இந்த அவதானம் தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் பொருந்தும்.

உலக நோக்கிற் சமயங்கள் நெடுங்காலத் தொடர்புடையன. அறிமுகம் உள்ளன. இப்படியான சமய அமைப்பிற் சைவம் தொன்மையானது. சிறந்தது எனப் பேசப்படும் பெருமை வாய்ந்தது. அதேவேளை மற்றைய சமயங்களை உரசாமல் அவற்றையும் கணித்துத் தன்னை வழி நடத்துகிறது. எனினும் களப்பிரயர், காளாமுகர், பாசுபதர், அருகர், வைணவர், பௌத்தர், முகமதியர், கிறீத்தவர் என்போரின் ஊடுருவல்களுக்கு முகம் கொடுத்துத் தன்னை நிலை நிறுத்த வேண்டிய தேவையை உணர்ந்து காலத்துக்குக் காலம் போராடியும் உள்ளது. அந்த நிலைகளில் ஒன்றான கிறீத்தவம் நாவலர் காலத்தில் நம்மைப் பெரிதும் நெருங்கியது. அதைப் புறங்கண்டவர் நாவலர் பெருமான். அவரை இன்று ஒதுக்கியமை நமக்குப் பெரும் விழுக்காடு என்பதை உணரச் சைவ மெய்யியலாளர்கள் இன்று அருகிப் போயினர். நாவலர் சிலை இடம் மாறியதே சைவத்துக்கோர் அபாய ஒலி எனலாம். ஏனெனிற் பலர் கிறீத்தவர் ஆகிவிட்டனர்; ஆக்கப்படுகிறார்கள். காரணம் மனமாற்றம் மத மாற்றமாய் விட்டமை. சமய நம்பிக்கை, உறுதி பல காரணிகளாற் பெலவீனப்பட்டு விட்டது. இளம் தலைமுறையினரின் எதிர்காலச் சமயநிலை என்ன என்ற விசாரம் முதியோர்களின் உள்ளத்தில் நெருப்பாய் முழாசிக் கொண்டிருக்கிறது. சைவத்திற்கும் இவர்களுக்கும் இடையே ஒரு சமாந்தர நிலை வளரக் காணலாம். இதன் காரணிகள் கண்டுபிடிக்கப்பட்டு மாற்று வழிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய காலம் இது. ஆதியிலிருந்தே சமய அமைப்பு சமுதாயத்தின் முழுமையான வாழ்வியலை நெறிப்படுத்தி ஒழுங்கும் ஒழுக்கமும் வேலியாக சீர்சிறப்புடன் வாழ வழிவகுத்தது. சமய அடித்தளம் தனிமனித நோக்குடையதன்று. சமுதாயக் கண்ணோட்டம் உடையது; தெய்வ வழிபாடுடையது; ஆத்மீக நோக்குடையது; உயிரோடு ஒன்றித்தது.

நல்லொழுக்கங்களைக் கட்டி வளர்த்து உருப்படியான கொள்கைகளைப் பரப்பி நற் சமுதாயத்தை உருவாக்கி வையகத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்தது சைவ சமயம். ஒவ்வொரு சமயங்களும் நாகரிகம், பண்பாடு, கலை கலாச்சாரம், வழிபடு நெறி, சடங்குகள், பழக்கவழக்க ஒழுகலாறு, மரபுகள், ஆலய அமைப்பு, ஆராதனை, வழிபாட்டு முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசமானவை. நாம் மேற்கொள்ளும் சைவம் தனித்துவமானது. சிவனையே முழுமுதற் கடவுளாக வழிபாடியற்றுவது. இன்று சைவத்தை இந்து மதம் என்று கூறுவது பொருந்துமா. எனவே இந்துமதம் எது? சைவ சமயம் எது? என்று முறைமையான விளக்கம் மக்களுக்குப் புரியாமலே வாழ்கின்றனர். இந்த நிலை தெளிவுபடுத்தப்படவேண்டும்; மாறவேண்டும்.

வேதங்கள் கூறும் பல தெய்வ வழிபாட்டில் சைவம் எதில் அடங்கும். சைவ சமயிகளின் வழிபடு தெய்வம் ஒன்றா பலவா? பெருந்தெய்வ சிறுதெய்வ வணக்கம் வந்தவாறு ஏது? இதனால் சைவத்துக்கு ஏற்பட்ட மாற்றங்கள் எவை? இந்து சமய வழிபாட்டு அமைப்பு எது? யார் சைவ சமயிகள்? யார் இந்துக்கள்? அல்லது இரண்டும் ஒன்றா? சைவ தர்மங்கள், தத்துவங்கள் எவை? இந்துமத தர்ம அடிப்படை என்ன? இந்துசிம், சைவாசிம் என்ற ஆங்கிலப் பிரயோகத்தின் உண்மைப்பொருள் என்ன? பலர் ஆங்கிலத்தில் இந்துசிம் வேறு, சைவாசிம் வேறு என எழுதியுள்ளனர். ஒப்பீடு செய்துமுள்ளனர். வேதாந்தம் ஆரிய மதம் என்பர். வேதாந்தம் பேசிய சங்கரர் ஈற்றில் பஜகோவிந்தம் பாடியுள்ளார். இப்படிப் பல வினாக்கள் எம்மத்தியில் எழுகின்றன.

விநாயகர் பலர். விநாயக அவதாரம் பற்றி பிளவுபட்ட கதைகள் புழக்கத்தில் உள்ளன. முருக வழிபாட்டில் அவர் உநத்தி பற்றியும் இரு கதைகள் உலாவுகின்றன. சாஸ்தா அவதாரமும் அப்படியே. முருகன் பலர். துர்க்கா கோயில்கள் பல. எந்தக் கோயிலுக்குப் போவது? எந்தத் தெய்வத்தை வழிபடுவது? எல்லாத் தெய்வத்தையும் வழிபடாது விடில் மனம் அமைதியடைவதில்லையே என்ற ஆதங்கங்கள் ஐயப்பாடுகள் எழாமலும் இல்லை. கோயிலிலே ஏகப்பட்ட தெய்வங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. எப்பக்கமுமே கால் நீட்டி வணங்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

எமது சமயம் எது? எம் வழிபடு கடவுள் யார்? என்ற நிலையில் தடுமாறும் சைவ சமயிகளின் நிலைப்பாடு சும்மா இருப்பவரையும் சிந்திக்க வைக்கிறது. ஏகப்பட்ட கடவுள்களும் ஏகப்பட்ட ஆலயங்களும் ஏகப்பட்ட நூல்களும் இருந்து என்ன பயன் காண்போம்? ஒரு புனித பைபிள், பரிசுத்த குரான், தூய திரிபிடகம் போல் எமக்கு ஓர் கைநூல் இல்லையே என நாம் நினைப்பது தவறில்லையே. புரோகிதர்களைக் கேட்டாலும் பதில் சமய நிலை. ஏன் எமக்கு எனப் பலர் மதம் மாறினார்கள் என்பதும் ஒரு உண்மை. தெய்வங்கள் வெளிநாடுகளில் பெருகும் அளவிற்கு தெய்வீகம் வலுப்படவில்லை. சமய அறிவு சைபர் தான். கோயில்கள் பெருகியும், சமய அறிவற்றவர்களாய் நம்மவர் வாழாமல் ஆலயங்களும் அந்தணர்களும் சமய சபைகளும் ஆவன செய்யாவிடின் கால வெள்ளத்தால் சமயம் அடியுண்டு போகும் என்பதை இனியேனும் சைவசமயம் மனதிற் கொள்ளவேண்டும்.

மாதாகோயில் கிறித்தவ மதத்தோடு தொடர்புடையது. மடு மாதா, வேளாணங்கண்ணி மாதா, சந்தன மாதா, சந்தோஷி மாதா நாம் அறிந்த பெயர்கள். இப்போது சந்தோஷி மாதா, பஞ்சமாதா வணக்கம் வெளியிடங்களில் பரவியுள்ளது. பௌத்தரைத் தவிர வேறு எந்த மதத்தினரும் சைவ இந்து ஆலயங்களைத் தெய்வங்களைத் தொழுவதே இல்லை. ஆனால் சைவசமயிகள் பல தெய்வ வழிபாடியற்றுபவர்கள் ஆதலினால் புறச்சமயத் தலைவர்களையும் தெய்வத்தையும் வழிபடும் நிலை வந்தது. தெய்வமே இல்லை என்ற கோட்பாடுடைய சமயத்தையும் மதிப்போம். ஆனால் நடராசர் வழிபாட்டை அவர்களாக உருவகிக்கும் சைவ சமயிகளும் நம் மத்தியில் இல்லாமலும் இல்லை. இந்த நடைமுறைகளால் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எச்சமயத்திலும் இருக்கலாம் என்ற எண்ணம் பலரை மதம் மாறவும் செய்தது. தேவன் கோயிலில் திருப்பலி பூசை தமிழில் நடைபெறும் போது, நாம் வழிபடும் சைவ ஆலயங்களில் நமக்குப் புரியாத மொழியே நடைமுறையில் தொடர்வதும் ஒரு கசப்புணர்வையே மக்களுக்கு ஏற்படுத்துகிறது. கடவுளை ஏற்றுக்கொள்ளாத சமயத்தை எம் தெய்வ நெறியோடு இணைத்துப் பாடுவோர் தாமும் கெட்டு நம்மையும் கெடுக்கிறார்கள். அப்படியாயின் நாம் ஏன் சைவர்களாக இருக்கவேண்டும்? கிறித்தவராய் இருக்கலாமே என்று சமயம் மாறியவர்களை நாம் தப்பாக மதிக்கக் கூடாதன்றோ !

இறைவன் திருமேனிகள் வழிபாட்டுக்குரியன. மூலமூர்த்தியைப் படம் எடுத்து, கலண்டர் அடித்து அன்பளிப்புச் செய்வதும், ஆலய விளம்பரங்களில் கடவுள் படங்களைப் பிரசுரிப்பதும் எவ்வளவு அவவாதமான செயல்? இவை காலில் மிதிபடுவதும் குப்பைத்தொட்டியை சென்ற யடைவதும் எரிபடுவதும் மீளப் பாவிக்கப்படுவதும் எவ்வளவு சமயத் துரோகம் என்பதை இனியாகிலும் சீர்தூக்கிப் பார்த்தால் சமய வளர்ச்சிக்கு உதவியாகும். இப்படி வியாபாரிகள் தொழில் முகவர், புரோகிதர், சோதிடர், தரகர் போன்ற பலரும் பஞ்சாங்கக் கலண்டரில் கடவுள் படத்தை பிரசுரியாமல் இயற்கை அழகை படமாக வெளியிட முன்வருவது நம் சமயத்தையும் தெய்வத்தையும் மதிப்பதாகும். இவை எல்லாம் எங்கே போகின்றன? குப்பை சேகரிக்கும் கனரக வாகனங்களில் சேகரிக்கப்பட்டு, அழுக்கோடு அழுக்காய் கலந்து எரிக்கப்படும். பசளையாக்கப்படும். இது நம் சமய வழிபடு தெய்வங்களை அவதூறு பண்ணுவதாகும். இதைப் பிற மதத்தவர் பார்த்து நகைக்கிறார்கள். இஸ்லாமிய மதப்பற்றை நாம் போற்றி இப்படியான இழி செயல்களை மேற்கொள்ளாது நம் சமயப் பெருமையைப் பேணுவோமாக.

இன்னொரு முக்கியமான விடயம். ஆலயங்கள் படங்களால் நிறைந்திருப்பது. முறைப்படி ஆவாகனம் செய்யப்பட்ட மூர்த்தங்களே வணக்கத்துக்குரியன. மந்திர, தந்திர, யந்திர, தம்ப, விம்ப, கும்பம் என்பவற்றோடு தொடர்புடையன. நம் மூர்த்தங்களை வழிபடுவதா? படங்களைக் கும்பிடுவதா எது சரியானது? இவற்றைச் சீர்தூக்கிச் சிந்தித்து நடைமுறைப் படுத்துவோமாக.

சமயம் சிரிப்புக்கோ நகைப்புக்கோ இடமானதன்று. இடமளிக்கவும் கூடாது.

சைவம் ஒரு சாம்பார் சமயம் அன்று. தனித்துவமான பெருமை வாய்ந்தது இச்சமயம். எனவே ஒவ்வாமைகளை விலக்கி, பொருத்தமானதை மேற்கொள்வோம். ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு இடம்கொடோம். எங்கள் இல்லங்கள் தோறும் நிம்மதியாகக் கடவுள் வணக்கத்தை தினமும் மேற்கொள்வோம். சைவத்தைப் பேணுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவம் காக்கும்

நாகேந்திரர் திடுக்கிட்டார். அவருடைய அதுநாள் வரையிலான ஜாதகம் படித்தலில் இப்படி ஓர் அதிர்ச்சி அவருக்கு ஏற்பட்டதேயில்லை. மீண்டும் மீண்டும் கட்டங்களைத் தன் ஆள்காட்டி விரலால் தடவித்தடவி சுற்றிச் சுற்றி வந்து சோதித்தார்.

இல்லை வாய்ப்பே இல்லை. அன்றிரவு அந்த ஜாதகக்காரன் மரணத்தைத் தழுவுவதை யாராலும் தடுக்க முடியாது. இன்னும் சில மணிநேரத்தில் தன் விதி முடியப்போவதை உணராமல் அவன்தான் எவ்வளவு வெகுளியாக அவரை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனிடம் எப்படி உண்மையைச் சொல்வது?

தன்னுடைய தர்மசங்கடத்தை மிகவும் உன்னிப்பாக அவனுடைய ஜாதகத்தை ஆராய்வது போன்ற முகபாவனையில் மறைத்துக்கொண்டார் நாகேந்திரர். அவனைத் தவிர்க்க வேண்டும். இன்னும் ஒருசில மணி நேரத்துக்குள் அவனுக்குத்தான் என்ன நற்பயன்கள் விளைந்துவிடப் போகின்றன? அப்படியே விளைந்தாலும் அதை அனுபவிப்பதற்குள் தான் அவனுடைய வாழ்வு முடிந்துவிடுமே? ஆனால் இந்தத் துர்ப்பலனைத் தன் வாயால் சொல்லத்தான் வேண்டுமா?

தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவனைப் பார்த்து இந்தாப்பா உன்னோட ஜாதகத்தை நான் ரொம்பவும் அலசிப் பார்க்க வேண்டியிருக்கு. அதனால இப்ப உடனே உனக்கு உன் ஜாதகப் பலன்களை முழுமையாகச் சொல்ல என்னால் முடியலே. அதனால நாளைக்குக் காத்தால நீ வா. உனக்கு விவரமா சொல்கிறேன் என்று கூறி அனுப்பி வைத்தார்.

அவன் போனதும் நாகேந்திரரின் மனைவி அவரை எதிர்கொண்டாள். "நீங்க என்ன சொன்னாலும் அது நடக்கும். ஒரு ஜாதகத்தைப் படித்து பலிக்கக்கூடிய பலனா சொல்ற உங்க வாய் அவனை நாளைக்கு வரச்சொல்லியிருக்கு. அவனோட ஜாதகத்தை நீங்க கூட்டி, கழிச்சுக் கணக்குப் போட்டுத் தடுமாறிண்டிருந்ததை நான் உள்ளேயிருந்து கவனிச்சுண்டுதான் வந்தேன். அவனை அனுப்பினதுக்கும் ஏதோ உள்ளர்த்தம் இருக்கு. அவனுக்கு என்ன கெடுதல் நேரப்போகிறது?'' என்று பதைபதைப்புடன் கேட்டாள்.

"கெடுதலா? இந்த ஜாதகப்படி அவன் இன்னிக்கு ராத்திரியே எமனுக்கு விருந்தாளியாய்ப் போகப்போகிறான். அதை என் வாயால சொல்ல எனக்குத் திராணியில்லே. இன்று போய் நாளை வான்னுட்டேன்'' தயங்கியபடி சொன்னார் நாகேந்திரர்.

அடக்கடவுளே! என்று பதறித் துடித்தாள் மனைவி. நாளைக்கா வரச் சொன்னீங்க? அப்படியானால் அவன் ஜாதகப்படியான மரண சம்பவம் இன்னிக்கு ராத்திரி நடக்காதா? உங்க வாக்கு இதுவரைக்கும் இருந்தது போலவேதான் இருக்கும்னா அவன் நாளைக்கு நிச்சயம் வருவானே.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதெப்படி அதெப்படி? நாகேந்திரன் தடுமாறினார். என்வாக்கு பலிக்கனும்னா அவன் நாளைக்கு வரணும். அவன் ஜாதகம் பலிக்கும்னா அவனால் வரமுடியாது. அதாவது என் கணக்கு சரியாகும். கணக்கு சரியாகுமா வாக்கு பலிக்குமா?

மொத்தத்தில் அன்றிரவு அவருக்கும் சரி அவருடைய மனைவிக்கும் சரி, தூக்கம் போச்சு!

விஜயன் தன் கிராமத்தை நோக்கி நடந்தான்.

மாலை வேளை மயங்கிக்கொண்டிருந்தது. இரவுக்குள் கிராமத்துக்குப் போய் விடலாம். இரவு தூங்கிவிட்டு, காலையில் மீண்டும் புறப்பட்டு ஜோதிடரைப் பார்க்க வேண்டியதுதான் என்று தீர்மானித்துக்கொண்டான்.

இருட்டு கருமையை அதிகரித்துக்கொண்டே வந்தது. இருட்டுக்குக் கார்மேகமும் துணை புரிந்தது. நட்சத்திரங்களும் சந்திரனும் மேகங்களை ஊடுருவ முடியாமல் தவித்தன. கருமை வலுக்க வலுக்க அந்தப் பிராந்தியமே கொஞ்சம் கொஞ்சமாகக் குளுமைக்கு ஆட்கொள்ளப்பட்டு வந்தது. சில்லென்று வீசிய காற்று, மண்வாசனையையும் சுமந்து வந்தது.

மழை, தூறலாய், பன்னீர்த்துளி சுகமாய்த் தான் ஆரம்பித்தது. ஆனால் அதுவே நீள் கம்பிகளாகி வானத்தையும் பூமியையும் இணைக்க ஆரம்பித்தபோதுதான் அவன் புகலிடம் தேடினான். மழையோடு மின்னலும் இடியும் சேர்ந்து கொண்டு அவனை விரட்டி மகிழ்ந்தன.

அதோ! ஒரு மண்டபம். பாழடைந்த மண்டபம் தான். ஆனாலும் பரவாயில்லை. ஆபத்துக்குப் பாவமில்லை. நனையாமல் தன்னைக் காத்துக் கொண்டால்தான் மறுநாள் மீண்டும் வந்து ஜோதிடரைப் பார்க்க முடியும். ஒருவேளை மழை, குளிர், காரணமாக உடல் சுகவீனமுற்று வரமுடியாமலேயே போய் விடுமோ? அவன் கண்களில் இப்போது மழை.

ஆனால் ஒதுங்கப் போன இடமும் அவனைப் பார்த்து கேலி செய்தது. கலகலத்துப் போயிருந்த அந்தப் பாழடைந்த மண்டபத்தின் விரிசல்களினூடே மின்னல் அவனை மிரட்டியது. ஓர் இடி விழுந்தாலும் போதும், பொலபொலவென்று உதிர்ந்துவிடும் அந்த மண்டபம்.

ஆனால் அந்த மண்டபத்துக்குள்ளே அது என்னபீடம்? ஓ! அது ஒரு சிவலிங்கம். என்ன கொடுமை இது? சிலந்திக்கூடுகள் தம் இழைகளால் லிங்கத்தைச் சுற்றிக்கொண்டு எந்த மார்க்கண்டேயனுக்காகப் போரிட்டுக்கொண்டிருக்கின்றன? எமனுடைய பாசக் கயிறு போலத் தோற்றமளித்த அந்த சிலந்தி வலைப் பின்னல்களை அவன் தன் கைகளாலேயே அறுத்து அகற்றினான். லிங்கத்தின் மீது படிந்திருந்த தூசிகளும் தும்பும் மேலே நேராக விதான ஓட்டை வழியாக விழுந்து கொண்டிருந்த மழைத்தண்ணீரில் கரைந்தோடி லிங்கத்திற்குப் புதுப்பொலிவு கொடுத்துக்கொண்டிருந்தது.

அடடா..... இந்த சிவாலயம் இப்படி எழில்கெட்டுப் போயிருக்கிறதே! எனக்கு மட்டும் வசதி இருந்தால் இந்த ஆலயத்தை உடனே புனருத்தாரணம் செய்வேனே! என்று அங்கலாய்த்துப் புழுங்கினான் விஜயன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உழைப்பேன். அதிகம் சம்பாதிப்பேன். என் வருவாயைக் கொண்டு இந்தப் பாழடைந்த மண்டபத்தைப் புதுப்பிப்பேன். இந்த சிவலிங்கத்தைத் தூய்மைப்படுத்துவேன். மண்டபத்தைச் சுற்றிலும் நந்தவனம் அமைப்பேன். ராஜகோபுரம் கட்டுவேன். கோபுரம், ராஜகோபுரம், உட்பிராகாரங்கள், பெரியமணிமண்டபம், புதுப்பிக்கப்பட்ட ஆவுடையார், அதன்மீது புதுமெருகு கொண்ட சிவலிங்கம் அடடா. புதிய கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்வேன். மங்கல ஒலிமுழங்க வேதியர் புடைசூழ திருக்குடம் ஏந்தி கோயிலை வலம் வருவேன். சாரத்தில் ஏறி திருமஞ்சனம் செய்வித்து கும்பாபிஷேகம் செய்வேன். சுற்றுவட்டார கிராமத்து மக்களெல்லாம் திரண்டு வந்து கூடுவார்கள். அடடா.... அப்போதுதான் எவ்வளவு பிரமாண்டமாக இந்தக் கோயில் வளர்ந்திருக்கும். எத்தனை லட்சம் பக்தர்கள் இந்தக் கோயிலுக்கு வருவார்கள். அவர்களுடைய துயரெல்லாவற்றையும் இங்கு எழுந்தருளி யிருக்கும் எம்பெருமான் எப்படியெல்லாம் தீர்த்துவைப்பார்! எம் நாயகன்தான் எவ்வளவு கம்பீரமாக கொலுவீற்றிருப்பார்! தினசரி ஆகமங்கள் என்ன, திருவிழாக்கள் என்ன, பண்டிகைகள் என்ன, எவ்வளவு கோலாகலமாக இந்தக் கோயிலில் கொண்டாடப்படும். எவ்வளவோ தருமங்கள் இக்கோயில் மூலமாகச் செய்யப்படும். அதில் உள்ளூர்வாசிகள் மட்டுமன்றி வெளியூர் பக்தர்களும் தான் எத்தனை ஆயிரம் பேர் பயனடைவார்கள்.

விஜயனின் கற்பனை எல்லை கடந்து போயிற்று. மானசீகமாகவே கோயில் கட்டி கும்பாபிஷேகமும் நடத்திவிட்டான். அந்த சிவனுக்கு பிரதோஷ காலத்தில் பாலால், பன்னீரால், பச்சரிசிமாவால், கரும்புச் சாறால் அபிஷேகம் பண்ணி ஆனந்தம் கொண்டான்.

பளீரென்று ஒரு மின்னல். கற்பனை கலைந்தது. அதிர்ச்சியுடன் கண் விழித்தான். விரிசல் விட்ட விதானத்திலிருந்து மின்னல் பேரொளி. அந்த ஒளியில் அவன் கண்டதுதான் என்ன?

மிகப்பெரியதாகப் படமெடுத்தபடி அவனைப் பார்த்து சீறிக்கொண்டிருந்தது ஒரு கருநாகபாம்பு. அவன் சுதாரித்துக் கொள்வதற்குள் எம்பி அவன் மீது பாய்ந்தது.

பளிச்சென்று ஒதுங்கி அந்த மண்டபத்தைவிட்டு வெளியே ஓடிவந்து விழுந்தான் விஜயன்.

பேரிடி ஒன்று விழுந்தது. அந்த அதிர்ச்சியில் மண்டபம் கிடுகிடுத்தது. இலேசாக முட்டுக்கொடுத்துக் கொண்டிருந்த தூண்கள் நழுவ, ஏற்கனவே சிதிலமடைந்திருந்த மேல்விதானம் அப்படியே பொக்கென்று கீழே விழுந்தது. எந்த பாதிப்பும் இல்லாமல் சிவலிங்கம் மட்டும் கொட்டும் மழை அபிஷேகத்தில் திளைத்தபடி அவனைப் பார்த்துப் பாசமாய்ச் சிரித்தது.

அப்போதைக்குத்தான் உயிர்தப்பிவிட்டாலும் மறுநாள் பொழுது விடிந்ததும் ஜோதிடரைப் போய்ப் பார்த்து அவர் குறித்துக் கொடுக்கும் ஆகம விதிகளின் படியும் கட்டி கும்பாபிஷேகமும் செய்யவேண்டும் என்று தீர்மானமாக நினைத்துக்கொண்டான் விஜயன். தன் கிராமத்தை நோக்கி மழையையும் பொருட்படுத்தாமல் நடந்தான்.

பொழுது புலர்ந்தது. வாசல் கதவைத் திறந்த நாகேந்திரன் திடுக்கிட்டார். வாசலில் காத்திருப்பது யார்? நேற்று யாருடைய ஜாதகத்தைப் படித்து யாருடைய விதி நேற்றோடு முடிந்ததென்று மனசுக்குள் கணக்குப் போட்டு அனுப்பி வைத்தாரோ, அதே கிராமத்தான். இவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகவில்லை. என் கணக்கு தப்பா? இதுநாள் வரை நான் படித்த ஜோதிடக்கலை தன் அனுபவம் இதுவரை கொஞ்சம் கூடப் பொய்க்காத தன் வாக்கு. அதெல்லாம் அந்த ஜோதிட அறிவெல்லாம் இவனுடன் ஏற்பட்ட அனுபவத்தில் மாயையாகி விட்டதா? படித்ததெல்லாம் வீணா?

ஆனாலும் அவனை வரவேற்று முன்னறையில் அமர்த்தி, தன் ஜோதிட ஆய்வு கூடத்திற்குப் போனார் நாகேந்திரர். உயரே வைத்திருந்த அவனுடைய ஜாதகத்தை எம்பி எடுக்க முனைந்த போது ஒரு ஓலைச்சுவடி கீழே விழுந்தது. விழுந்து பிரிந்தது.

குனிந்து அதை எடுக்கப் போன நாகேந்திரர் பளிச்சென்று தெரிந்த வாசகங்களைப் படித்தார். எவன் ஒருவன் மானசீகமாகச் சிவன் கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டி கும்பாபிஷேகம் செய்கிறனோ அவனுக்கு மரணம் தள்ளிப்போகிறது.

உடலே சிலித்தது அவருக்கு. விஜயன் மரணத்தை அப்போதைக்கு வென்றுவிட்டான். அப்படியானால் அவன் மானசீகமாக சிவன் கோயில் ஒன்றுக்கு கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறான்.

ஆவல் பொறுக்கமாட்டாமல் அவன் தன்னைச் சந்தித்த இரண்டு வேளைகளுக்கும் இடையே நடந்ததென்ன என்று கேட்டார்.

விஜயன் விரிவாக நடந்ததை விளக்கிச் சொன்னான்.

தன்னைத் தழுவி இறையருள் வேண்டிய மார்க்கண்டேயனை யமனுடைய பாசக்கயிற்றிலிருந்து மீட்டார் சிவன். விஜயனைப் பொறுத்தவரை தன்மீது படர்ந்திருந்த சிலந்தி வலைக்கயிற்றை அறுத்துத் தள்ளிய சேவைக்காக அவனை மண்டப இடபாடிலிருந்து விரட்டி அவன் உயிரையும் காத்திருக்கிறார் என்பதை ஜோதிடர் நாகேந்திரன் புரிந்து கொண்டார்.

சிவம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம ஜெபம் அவசியம்!


பேராசிரியர் இளம்பிறை மணிமாறனின் இனிமையான சொற்பொழிவைச் சுகமாக அனுபவித்தனர் நாகர் கோவில் மற்றும் நெல்லை நகர மக்கள். ஜுலை 2 ஆம் திகதி நாகர்கோவிலிலும் அடுத்த நாள் 3 ஆம் திகதி நெல்லையிலும் ஆன்மீக மாலை நிகழ்ச்சிக்குக் கூடிய மக்கள் கொடுத்து வைத்தவர்கள்!

பொதுவான இன்றைய ஆன்மீகத் தேவையைத் தன் பேச்சின் மையக் கருத்தாக எடுத்துக்கொண்டார் பேராசிரியர் இளம்பிறை மணிமாறன். அரங்கத்தில் கூடியிருந்த ஆன்மீக அன்பர்களிடையே அவர் பேசியதில் இருந்து ஒரு துளி.

உலகத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்தவை மந்திரங்கள். ராம நாமம் ஜெபித்தால் மங்களம் உண்டாகும். ஆறெழுத்து மந்திரமான 'ஓம் சரவணபவ' என்பதைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தால் நம் உடலில் ரத்த அழுத்தமே வராது. ஐந்தெழுத்து மந்திரமான சிவாயநம என்பதை ஜெபித்தால் எல்லாப் பலன்களும் கிடைக்கும்.

நாம் அன்றாடம் சொல்வதற்கு வசதியாக எத்தனையோ மந்திரங்கள் உள்ளன. எந்த மந்திரத்திலாவது உங்களுக்குக் குழப்பம் இருந்தால் பிரணவ மந்திரமான ஓம் என்பதை உச்சரியுங்கள். மனதை ஒருநிலைப்படுத்துவதற்கான ஆற்றல் பிரணவ மந்திரத்துக்கு உண்டு. எந்த மந்திரத்தைச் சொல்லும் போது உங்கள் மனது எளிதாகிறதோ அந்த மந்திரத்தையே தொடர்ந்து சொல்லுங்கள்.

வீட்டில் ஒரு குயர் நோட்டு ஒன்றை வாங்கி மஞ்சள் தடவி பிள்ளையார் சுழி போட்டு பொதுவான ஓர் இடத்தில் மேசை மேல் வைத்துவிட வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் வீட்டைவிட்டு வெளியே கிளம்பும் போது அவரவரின் இஷ்ட தெய்வ 'நாமா'வை நோட்டில் எழுதி வைத்து விட்டுக் கிளம்ப வேண்டும். அதை ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் கடைப்பிடித்தால் குடும்பத்தில் எப்போதுமே சுபீட்சம் நிலவும். பகவான் நாமாவை மிஞ்சின சக்தி வேறொன்றும் இல்லை என்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மாவட்ட கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம தவத்திருவடிவேற் சுவாமிகளின் குருபூசைத்தினம்

யாழ் குடாநாட்டின் வடக்கே உள்ள இணுவில் என்னும் கிராமம் நீர்வளம், மண் வளம், பக்தி வளமுடையது. அத்துடன் அக்கிராமம் பக்தி வளர்க்கும் ஞானியர் பரம்பரையை அதிகமாக உடையது.

இப்பகுதியில் இருந்த ஓர் குடும்பத்தில் தோன்றிய சிறுவனாகிய வடிவேலுவுக்கு ஆன்மீகத்தாகம் 12 வயதில் மிதமிஞ்சிக் காணப்பட்டது. அக்காலம் ஆங்கிலேயரின் மதமாற்றக் கெடுபிடிகாலம். வடிவேல் ஒவ்வொருநாளும் யாழ்ப்பாணச் சித்தர் யோகர் சுவாமிகளைத் தரிசித்து வந்தான். சிறுவனின் ஆன்மீக பக்குவ நிலை கண்ட யோகர்சுவாமிகள் கந்தர்மடத்து வேதாந்த மகாதேவா சுவாமிகளிடம் அனுப்பினார்.

சிறுவன் யோகர்சுவாமிகளின் திருவடிகளை வணங்கிய பின் மகாதேவா ஆச்சிரமம் சென்றான். மகாதேவா ஆச்சிரமம் கந்தர்மடத்தில் இருந்தது. ஆச்சிரமத்தின் குருவாகிய மகாதேவா சுவாமிகள் சிறுவனின் ஆன்மீக நாட்டத்தைக் கண்டு மனமகிழ்ந்தார். சிறுவன் சுவாமிகளிடம் வேதாந்தம் முழுவதும் அச்சிறுவயதில் கற்றான். பெற்றோரின் மேற்பார்வையில் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் தமிழ் இலக்கிய நூல்களான கம்பராமாயணம், பாரதம், வைசித்தாந்தம், திருமுறைகள், சமஸ்கிருதம் என்பன கற்றான்.

வடிவேலுவுக்குப் பத்தொன்பது வயதாகியது. மகாதேவா சுவாமிகளிடம் சந்நியாசம் பெற்றுக் காவி உருத்திராக்கம் திருநீறு முதலியன தரித்தார். நல்ல தோற்றம், குரல்வளம் பொருந்திய சாரீரம் இசைக் கருவிகளுடன் இலங்கையின் பலபாகங்களிலும் சமயப் பிரசங்கங்கள் கதாப்பிரசங்கங்கள் செய்தார்.

வடிவேற் சுவாமிகளுக்கு கிளிநொச்சியில் வயல் இருந்தது. யோகர் சுவாமிகள் அரசினர் நீர்ப்பாசனப் பகுதியில் உத்தியோகம் பார்த்தார். அக்காலம் கிளிநொச்சி வன்னி வாழ் மக்கள் சைவ சமய உண்மைகள் அறியாதிருந்தனர். கிளிநொச்சிப் பகுதியில் பாடசாலைகளோ ஆலயங்களோ இல்லாதிருந்தது. அதனால் யோகர் சுவாமிகளாகிய சிவதொண்டனும் மகாதேவா சுவாமிகளும் ஆசிகூற சிறுதொண்டனாகிய வடிவேற் சுவாமிகள் கிளிநொச்சி ஜெயந்தி நகரில் மகாதேவா ஆச்சிரமம் (1956 இல்) அமைத்தார்.

அந்த ஆச்சிரமத்திலிருந்து கொண்டு கிளிநொச்சியில் பல பகுதிகளுக்குச் சென்று சமயப் பிரசங்கம் செய்தார். கிளிநொச்சியில் பல ஆலயங்களுக்கும் பல பாடசாலைகளுக்கும் அத்திவாரம் இட்டார். பாடசாலை மாணவர்களுக்கும் பிறர்க்கும் சமய தீட்சை முதலியன அளித்தார். ஆச்சிரமம் சிவகாமி சமேத நடராசர் கோயிலுடன் அமைந்திருந்தது. நித்திய பூசை, விசேட விழாக்கள் என்பன நிகழ்த்தினார். தினமும் மாகேசுவர பூசையும் திருமுறைகள் பண்ணுடன் ஓதல் வேதாந்தம் படித்தல் என்பன நடத்தினார்.

ஆன்மீகத் தாகத்துடன் வரும் அடியவர்களுக்கு அருள்மொழி வழங்கி வருவார். இவ்வாறு எண்ணிக்கையில்லாத சமயசமூகப் பணி செய்த சுவாமிகள் 1906 இல் மலர்ந்து 1991 இல் மகாசமாதி அடைந்தார். அவர்களின் குருபூசைத் தினம் ஆனி ஆயிலியமாகும்.

– மாதாஜி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் வழிபாட்டுக் கொள்கை

– பொன் தெய்வநாயகிசோதி –

வாழ்வு இன்பமாகவும் நிறைவாகவும் அமைய வழிபாடு தேவை. வழிபாட்டின் பயனாய் கிடைக்கின்ற ஆற்றலைக் கொண்டே. உலக செயல்களில் ஈடுபட்டுச் சிறப்பாகச் செயல்புரிய முடியும். பாரதியைத் தேசிய கவிஞர் என்றே நாடு புகழ்கிறது. அவர் வீர உணர்வுடைய பாடல்கள், எழுச்சியூட்டும் பாடல்கள் ஆகியவற்றை மட்டும் பாடவில்லை. இறையுணர்வை மிகுவிக்கும் பாடல்களையும் பாடியுள்ளார். கவிதை பலவற்றை ஆக்கவும் நாட்டுக்கு உகந்த நல்ல கருத்துக்களை எடுத்துரைக்கவும் இறையருளே அவருக்குத் துணை செய்திருக்க வேண்டும்.

அவர் பாடிய தோத்திரப் பாடல்களில் கருத்தாழம் மிக்க அழகிய தத்துவங்களும் உண்டு. முற்றும் துறந்த ஞானிகளுக்குக் கிடைத்த பேரின்ப நிலையும் இவருக்குக் கிடைத்திருக்க வேண்டும். விநாயகர் அகவலில் 'பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன், கேட்கா வரத்தை கேட்க நான் துணிந்தேன்' – எனத் துணிவாக எடுத்துரைக்கிறார்.

'பேசாப் பொருள்' – என்றால் அதனைப் எப்படிப் பேச முடியும்? எனச் சிந்திக்கத் தோன்றுகிறதல்லவா? வழிபாட்டின் முடிவில் தியானத்தில் ஆழ்ந்து மௌன நிலையில் ஏற்படும் ஒப்பற்ற தன்மைகளைப் பேசத்தான் முடியுமா? உணர்ந்து அறியக்கூடிய பொருளை உரையால் எடுத்துரைப்பது எங்ஙனம்? விண்டுரைத்த முடியாத பொருள் விண்டுரைத்தாலும் பிறரால் புரிந்துகொள்ள முடியாத பொருள். அதனைப் பேச நான் துணிந்தேன் என்கிறார்.

'கேட்கா வரத்தைக் கேட்கத் துணிந்தேன் என்பதில் கேட்கா வரம் எது? நாமெல்லாம் இறைவனிடம் கேட்கும் வரம் எப்படிப்பட்டது? பொன், பொருள், புகழ், இன்பம் இவற்றிற்காகப் பலரும் இறைவனிடம் வேண்டுகின்றதைக் கண்டுள்ளார். பாரதி, அந்த சாதாரண வரத்தைக் கேட்கவில்லை. தனக்கென சுயநலத்துக்காக வேண்டாமல் பொது நலத்துக்காக வேண்டு கிறார். இவர் கேட்கும் வேண்டுதல் இதோ.....

''பூ மண்டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக, துன்பமு டிமையு நோயுஞ்
சாவு நீக்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
இன்புற்று வாழ்க! என்பேன்! இதனை நீ
திருச்செவிக் கொண்டு திருவுளமிரங்கி
அங்ஙனமாகுக என்பாய். ஐயனே
இந்நாள் இப்பொழு தெனக்கிவ் வரத்தினை
அருள்வாய் ஆதிமூலமே''

என விநாயகரிடம் வேண்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் அன்பும் அடக்கமும் பொறுமையும் நிலவ வேண்டும் என விரும்புகிறார். துன்ப நினைவு தரும் சோர்வும் பயமுமெல்லாம் அன்பிலழியுமடி கிளியே. அன்புக்கழிவில்லைதான் என கிளிப்பாட்டில் அன்பைச் சிறப்பிக்கிறார்.

இன்பமும் துன்பமும் கலந்ததே வாழ்க்கையல்லவா? ஆனால் துன்பமே தலைகாட்டாது இன்பமாக வாழ்க்கை அமைந்தால் அதுவே பெரும்பேறு அல்லவா? வறுமையோ உடல் நலக்குறைவோ ஏற்படாதிருத்தல் வேண்டும் என்றும் கேட்கிறார். இவைகள் யாவும் இறைவன் தரவும் செய்வான். அடுத்ததாக 'சாவு நீங்கி வாழவேண்டும்' எனக் கேட்பது பொருந்துமா எனப் பார்ப்போம்.

அவரவர் கடமைகளைச் சரிவர நிறைவேற்றி இயன்ற தொண்டுகளைப் பிறர்க்குச் செய்து பிறந்ததின் பயனை முழுமையாக அடைய வேண்டும். அதுவரை எமன் நெருங்கக்கூடாது. என் பணிகள் யாவும் முடித்து விட்டேன். இனி உடல் தொடர்பு வேண்டாம் எனக்கூறி எமனை அழைத்தாலொழிய வரக்கூடாது. இன்னொன்று உயிர் என்றும் நிலைத்திருக்கக்கூடியது உடல் மட்டும் தான் அழிந்து போகிறது. இறப்பு உயிர்க்கல்ல; உடலுக்கே! உயிர் பிறிதொரு உடலை எடுத்துக் கொள்கிறது. அவ்வளவே! சாவு நீங்க வாழவேண்டும் என்று கேட்ட பாரதி இறக்கவில்லை. புகழோடு நம்மிடையே வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். சாவினை வேண்டேன். தவிர்ப்பாய் போற்றி என ஓரிடத்தில் கூறியுள்ளார்.

சாகா வரமருள்வாய் – ராமா
சதுர்மறை நாதா – சரோசபாதா

எனப் பிறிதோரிடத்தில் கூறுகிறார்.

அருட்பிரகாச வள்ளல் பெருமானும் 'மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்' என அழைக்கிறாரல்லவா? இறைவனின் திருவடியைப் பற்றிக் குறிப்பிடுகையில் சாகாவரத்தைத் தந்த தாரகபாதம் எனவும் வள்ளலார் குறிப்பிடுவார்.

இறைவழிபாட்டில் மேன்நிலையடைய பாரதி பட்ட துன்பத்தையும் உருக்கத்தையும் பல பாடல்கள் வாயிலாக அறியலாம்.

''கண்ணுங் கருத்துமெனக்கொண்டு – அன்பு
கசிந்து கசிந்துகசிந்துருகி – நான்
பண்ணும் பூசனைகளெல்லாம் – வெறும்
பாலை வனத்தி லிட்ட நீரோ''

இப்பாடலில் வழிபாடு எப்படி அமையவேண்டும் என்பதை தெளிவாகக் காட்டுகிறார். கையொன்று செய்ய, வாய் ஒன்று சொல்ல வழிபாடு ஆற்றுவோர் பலருண்டு. கண்ணும் கருத்தையும் பூசையில் ஒன்றுபடுத்த வேண்டும். மன மொழி மெய்களாலான வழிபாடே உகந்தது. எண்ணங்களை ஒரே நோக்கில் செலுத்த வேண்டும். எங்கும் எந்நேரமும் இறைவனின் திருப்பெயரை உச்சரித்தபடி இருக்கவேண்டும். என்றாலும் துயின்றாலும் விழித்தாலும் நடந்தாலும் மறவாத நிலையடைய வேண்டும்! என்பதையே கண்ணுங் கருத்துமெனக் கொண்டு என்ற வரிகளில் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சொல்லை ஒரு முறைக்கு மேற்பட்டு அடுக்கினால் அழுத்தம் ஏற்படும். இங்கு கசிந்து என்ற சொல்லை மூன்று முறை உச்சரித்து உருகுகிறார். ''இப்படியெல்லாம் ஒன்றுபட்ட மனத்துடன் பூசை செய்யும் இவையெல்லாம் பாலைவனத்தில் ஊற்றிய நீராக மாறிவிடுமோ. பயன் விளையாதோ அம்மா'' என ஏங்கி வினாவுகின்றார்.

மகா சக்தியிடம் ஒரு விண்ணப்பம் விடுகின்றார் பாரதி. ''மோகத்தைக் கொன்று விடு. அல்லாலென்றன் மூச்சை நிறுத்திவிடு. பந்தத்தை நீக்கிவிடு. அல்லாலுயிர் பாரத்தைப் போக்கிவிடு. ''இப்படி துணிவாக உரிமையாகக் கேட்க பாரதியால் தான் முடியும். மோகம் மனிதனைக் கொன்று விடும். அந்த மோகத்தையே கொன்றுவிட வேண்டுமாம். அப்படி இயலாவிடில்'' என்னுடைய மூச்சையே நிறுத்திவிடு எனக் கட்டளையிடுகிறார்.

எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல நேசிக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர் பாரதி. அதனால் தான் ''நம்மைத் தின்னவரும் புலி தன்னையும் அன்போடு சிந்தையில் போற்றிடுவாய்'' என பாடுகிறார். காணுகின்ற காட்சியெல்லாம் அன்னை பராசக்தியாகவே கண்டவர். அந்தப் புலியையும் அன்னை பாராசக்தியாகவே நோக்குகின்றார்.

இப்படி உணர்வு நிலையில் வழிபாடு ஆற்றியதன் பயனாக அன்னை அவருக்குக் காட்சி தந்தாள். ஏதோ பெண் வடிவம் போலத் தோன்றுகின்றதே என்று அருகில் சென்று பார்த்தால் ஆதி பராசக்தியின் வடிவத்தையே கண்டாராம். தானும் அவளும் இரண்டற்ற நிலைமாறி கலந்துவிட்டாராம். ''பின்பு நின்னையல்லால் காளி பிறிது நானுமுண்டோ? என தான் என்பதே அங்கே இல்லாமல் ஒன்றுகலந்த நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். அக்காட்சி அவரின் உள்ளத்தில் கிளுகிளுப்பை ஊட்டுகிறது. ஆடுகிறார், பாடுகிறார்.

தகத்த கத்தகத் தகதக வென் றாடோமோ – சிவ
சக்தி சக்தி சக்தியென்று பாடோமோ?

என எக்களிப்போடு பாடிக்களிக்கிறார்.

பாரதியின் வழிபாட்டில் பராசக்தி மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறாள். இருப்பினும் கணபதி, கண்ணன், சூரியன், அக்னி போன்ற தெய்வங்களையும் பாடியுள்ளார்.

பாரதியின் பக்திப் பாடல்களையெல்லாம் தொகுத்து ஆராய்ந்து பார்த்தால் ஒரு உண்மை புலப்படுகிறது. உண்மையான பக்தனாகவும் தத்துவங்களை விளங்கி வந்த மேதையாகவும் ஏன் பெரிய ஞானியாகவும் தோன்றுகிறார். அவர் நாளும் இறைவனை வேண்டிப் பெற்ற ஆற்றலைக் கொண்டே பின்பு கவிதை பலவற்றை படைத்திருக்க வேண்டும். அவர் படைத்த கவிதைகள் இன்னும் நிலைத்திருக்கிறதற்கும் அந்த இறையருளே துணையாக நின்று வழிநடத்துகிறது என நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் சுவாமிகள்

(ஆத்மஜோதி)

பரத கண்டத்தைப் புண்ணிய பூமியென்று விவேகானந்தர் முதலியோர் கூறியதற்குக் காரணத்தை ஆராய்ந்தால், அங்கு காலத்துக்குக் காலம் வாழையடி வாழையாகச் சீவன் முக்தர்கள் தோன்றுவதே என்பது புலப்படும். பரத கண்டத்தின் ஒரு பக்தியாகக் கருதப்படும். இலங்கையிலும் காலத்துக்குக் காலம் கடையிற்சுவாமி, செல்லப்பாச்சாமி போன்ற பெரியோர்கள் தோன்றியுள்ளனர். இவர்கள் மரபில் தோன்றியவரே யோகர் சுவாமிகளும்.

## செல்லப்பாச்சாமி

யோகர்சுவாமிகளின் குருவாகிய செல்லப்பாச்சாமி கடையிற்சாமியின் சீஷராவர். இவரை ஞானியென்று அறிந்தவர்கள் மிகச்சிலரே. இவருடைய பேச்சையும் செயலையும் பார்த்த பெரும்பாலானோர் இவரை விசரர் என்று கருதி விசர்ச் செல்லப்பா என்றே அழைத்தனர். தமது சுயரூபத்தை உலகுக்குக் காட்ட விரும்பாத இப்பெரியாருக்கு விசர்ச் செல்லப்பா என்ற பெயர் அதிக சந்தோஷத்தைக் கொடுத்திருக்குமென்பது திண்ணம். குலசேகர ஆழ்வார். தம்மைப்பற்றிக் கூறியது செல்லப்பாச்சாமிக்கும் பொருத்தமாக விருக்கும்.

பேயரே எனக்கு யாவரும் யானும் ஓர்
பேயனே எவர்க்கும் இது பேசியென்
ஆயனே அரங்கா என்றழைக் கின்றேன்
பேனா யொழிந்தேன் எம்பிரா னுக்கே.

இவருடைய புறக்கோலத்தை மாத்திரம் கண்ட அநேகர் இவரிடம் நெருங்கவில்லை. உலகத்தாருக்கு இடங்கொடுத்தால் அவர்கள் தலையில் ஏறிவிடுவார்களென்று கூறுவாராம். இப்பெரியாரே நமக்கு "முழுவதும் உண்மை ஒரு பொல்லாப்பும் இல்லை எப்பவோ முடிந்த காரியம் நாமறியோம்" போன்ற மகாவாக்கியங்களைக் கொடுத்தருளியவர்.

இவர் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வீதியிலுள்ள ஒரு சிறு குடிசையில் வசித்தார். யோகர்சுவாமிகள் இவரை நல்லூர்த் தேரடியிற்றான் சந்தித்தவரென்பது பின்வரும் அவர் வாக்கால் அறியலாம். சிவதொண்டனில் வெளிவரும் நற்சிந்தனைகளில் தமது குருவைக் கல்மனமும் கரையும் படி புகழ்ந்து பாடியிருக்கிறார். அவற்றில் மூன்று செய்யுட்களை இங்கே தருகின்றேன். அவற்றில் முதற்செய்யுளில் தம் குருவின் புறத் தோற்றத்தையும் இரண்டாம் செய்யுளில் அவரின் தன்மையையும் மூன்றாம் செய்யுளில் சிவபெருமானே தமது குருவாகத் தோன்றி அருள் செய்தாரென்பதையும் கூறியுள்ளார்.

சிரித்து நல்லூர்த் தெருவிற் திரிவார்
வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்
எரித்தனர் பவமினி யெனக் கில்லையே.

பொறிவழியே போய்ப் புகுந்து திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயேநான் என்றுரைத்த
பெரியவனைப் பித்தனென்று பிறர் பேசும் பெருமானை
செறிபொழில்சூழ் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிலே காளியுடன் கூத்தாடுங் கண்ணுதலோன்
நாட்டிலே ஞானகுருவாய் நயந்து வந்து
மீட்டான் அவன் றன் விரையார் மரைடியை
மாட்சிமைசேர் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே.

## துறவு

யோகர்சுவாமிகளும் தமது குருவைப்போல் முற்றுந்துறந்த துறவியாயிருந்த போதிலும் யாழ்ப்பாணத்தார் மீது கொண்ட அன்பினால் தமது சுயரூபத்தைச் சிறிதாக நமக்குக் காட்டியுள்ளார். அவர் பூதவுடம்பைத் தாங்கிக்கொண்டிருக்கும்போதே அவராற் பெறக்கூடிய நன்மையை நாம் பெறவேண்டுமென்னும் நோக்கத்தாலேயே இச்சிறு கட்டுரையை எழுதத் துணிந்தேன்.

சுவாமிகளின் வாழ்க்கையை நாம் உற்று நோக்கும் பொழுது, நமக்குப் பிரதானமாகப் புலப்படுவது அவருடைய பூரணமான துறவுநிலையே. அவர் தம்முடைமை என்று ஒன்றையுங் கருதுவதுங் கிடையாது. நாளைக்கு என்று ஒன்றையும் வைப்பதும் கிடையாது. அன்பர்கள் கொண்டுபோய்க் கொடுக்கும் பொருள்களில் தான் உபயோகிப்பது மிகச் சிறுபகுதியே. ஒருவர் கொண்டுவரும் பழம் முதலியவற்றை மற்றவர்களுக்குக் கொடுப்பதே அவர் வழக்கம். அவருக்குத் தேவையான நேரத்தில் பணம் கிடைக்கும். உடனே அதைச் செலவு செய்துவிடுவார். தேவையில்லாவிட்டால் யார் எவ்வளவு கஷ்டப்படுத்தினாலும் ஒருவரிடமும் பணம் வாங்கமாட்டார். பற்றற்றவனிடத்தில் எல்லாப் பொருள்களும் தாமே வந்தடையும் என்னும் உண்மையை நாம் சுவாமிகளிடம் காண்கிறோம். சுவாமிகளும் இவ்வுண்மையை ஒருமுறை பின்வருமாறு கூறினார். ''பிச்சைக்காரரில் இழிவான பிச்சைக்காரனும் நான்தான், மகாராசாக்களில் சிறந்த மகாராசனும் நான் தான்.'' (I am a beggar of beggars and a maharajah of magarajahs).

சுவாமிகளின் இன்னுமொரு சிறந்த குணம் என்னவெனில் ஒரு விஷயத்திலாவது ஒரு மனிதனிலாவது கட்டுப்படுவது கிடையாது. சிற்சில காலங்களிற் சிற்சில தொண்டுகளைச் செய்வார். பின்னர் அவற்றை அறவே விட்டுவிடுவார். சில பிள்ளைகளுக்குச் சங்கீதம் கற்பதற்கு உதவி செய்யும் பொருட்டு சிலகாலம் வெள்ளிக்கிழமைகளில் வண்ணார் பண்ணையில் பஜனை நடத்தினார். பின்னர் புராண படனத்தைப் புனருத்தாரணம் செய்யும் பொருட்டு பெரிய புராண படனம், கந்தபுராண படம், இராமாயண படனம் முதலியவற்றை நடத்தினார். பின்னர் இவற்றை விட்டுவிட்டார்.

சுவாமிகள் தம் மனம் பதியும் சில அன்பர்கள் வீட்டுக்குப் போவார். அவருக்கு விருப்பம் இல்லாவிட்டால் மற்றவர்கள் எப்படித் தெண்டித்தாலும் போகமாட்டார். மேலும் எதையும் வழக்கப்படுத்திக் கொள்வது கிடையாது. ஒருமுறை சுவாமிகளுக்கு ஓர் அன்பர் நாலைந்து நாட்களாக இரவில் தேநீர் அனுப்பி வந்தார்.

இது ஒரு வழக்கமாகப் போகிறதென்றெண்ணி ஒருநாள் தேநீர்கொண்டு வந்த பையனைப் பார்த்தப் பின்வருமாறு கூறினார். ''நான் பிச்சைக் காரன்; பசித்தால் உங்கள் வீட்டில் வந்து கேட்டுச் சாப்பாடு வாங்கிச் சாப்பிடுவேன். இந்த வழக்கத்தை வைக்கவேண்டாம் என்று உன் தகப்பனாரிடம் சொல். கொண்டு வந்ததைக் கொண்டுபோ.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிகளின் அனுபவம்

சுவாமிகளிடம் பலவிதக் கொள்கையுடையவர்களும் பலவித நிலையிலுள்ளவர்களும் வருவார்கள். அவர்கள் ஒருவருடைய நம்பிக்கையையும் குழப்புவது கிடையாது. இதனால் ஒவ்வொருவரும் சுவாமிகள் தங்கள் தங்கள் கொள்கையுடையவர் என்று கருதுகின்றனர். இதனால் அவருடைய உண்மை அனுபவம் இன்னது என்று அறிவது கடினந்தான். ஆனால் அவருடைய வாக்கைக் கூர்ந்து நோக்குவோர்க்கு உண்மை புலப்படும். 'நீயே நான்', 'சீவனே சிவன்', 'நாமே அவன்' என்னும் வாக்குகளைக் கவனித்தால் எங்கும் ஒரு பொருளையே அவர் காண்கின்றாரென்பது புலப்படும். சுவாமிகளின் அனுபவத்தைப் பின்வரும் விவேகானந்தர் இயற்றிய சந்நியாச கீதம் தெளிவாகக் கூறுகிறது.

சலியா மனத்து வலியார் துறவீ!
ஒன்றே யுளதவ் வொன்றும் என்றும்
தன் வயத்தது வாய்த்தா னிருப்பதுவே
யாவையு முணர்ந்த தாவிலாத் தனிமை
நாம ரூபமாம் இவை இல்லது
களங்கம் இன்றி விளங்கும் பொருளது
இவ்வெளி மயக்கெனாம் அவ்வொரு பொருட்கண்
உளதே யாகும் பளகறு லோகக்
காட்சி யாகவும் சாட்சியாகவும்
ஆன்மா வாகவும் அப்பொருள் தோன்றும்
அதுதான் நீ என்றறியக் கடவை
ஓதுக நீ 'ஓம் தத் சத் ஓம்' என.

சுவாமிகள் எங்கும் பரம்பொருளைக் காண்பதாற்றான், ஒருவரிடமுங் குற்றங்காண்பது கிடையாது. உண்மையில் அவருக்கு கிட்லருக்கும், காந்தியடிகளுக்கும் வித்தியாசந் தோன்றுவது கிடையாது. எல்லாம் சிவன் செயலென்று அறிந்தவர்களுக்கு வித்தியாசங்கள் தோன்றாது என்பது. பின்வரும் தாயுமானவர் வாக்கால் நன்கு புலப்படும்.

அவனன்றி யோரணுவும் அசையாதெனும்
பெரிய ஆப்தர்மொழியொன்று கண்டால்
அறிவாவதேது சில அறியாமையேது இவை
அறிந்தார்கள் அறியார்களார்
மௌன மொடிருந்தார் என்போலுடம் பெலாம்
வாயாய்ப் பிதற்றும் அவரார்
மனதெனவும் ஒருமாயை யெங்கே இருந்துவரும்

வன்மையொடி ரக்கமெங்கே
புவனம் படைப்பதென்கர்த்த வியமெவ் விடம்

பூதபேதங் களெவ்விடம்
பொய்மெய் இதம் அகிதம் மேல்வருநன்மை தீமையோடு

பொறை பொறாமையு மெவ்விடம்
எவர் சிறியர் எவர் பெரியர் எவர் உறவர் எவர் பகைஞர்

யாது முனையன்றி உண்டோ
இகபர மிரண்டினும் உயிரினுக் குயிராகி
எங்கு நிறைகின்ற பொருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர் உபதேசம்

சுவாமிகள் தம்மிடம் வருகிறவர்களுக்குச் செய்யும் உபதேசம். ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செவ்வனே செய்யவேண்டும் என்பதே. பஞ்சமாபாதகங்களை ஒழித்து ஒருவன் தனது கடமையைச் செய்து வருவானாயின் அவனுக்குப் படிப்படியாக உண்மை விளங்கிவருமென்பது சுவாமிகள் கருத்து. ஒவ்வொருவருடைய கடமையும் அவரவர் பிராரத்துவத்துக்கு ஏற்றதாக இருக்கும் என்றும் அதில் ஏற்றத்தாழ்வு பார்ப்பது பிழையென்றும் கூறுவர். இனி உண்மையை உணர விரும்புவோர் எல்லோரும் துறவு நிலை பூணவேண்டு மென்ற அவசியமில்லை என்பர். பண்டைக்காலத்து இருஷிகளும் இக்காலத்து செல்லாச்சியம்மா போன்றவர்களும் இல்லறத்திலிருந்தே பரம்பொருளை எய்தினரென்று எடுத்துக்காட்டுவர். துறவுநிலை ஒருசிலருக்கே உரியதென்பது சுவாமிகள் கருத்துப் போலும்.

மனிதன் தன்னைத்தானே திருத்திக்கொள்ள வேண்டுமன்றி உலகத்தைத் திருத்த முயல எத்தனித்தல் கூடாதென்பர். இதற்கு உதாரணமாக விவேகானந்தர் எடுத்துக்காட்டிய நாய்வால் கதையைக் கூறுவர். உலகத்தைத் திருத்த முயலுவது நாய்வாலை நிமிர்த்த முயலுவதை ஒக்கும் என்பர். உலகத்துக்கு நன்மை செய்வதால் நாமே அதிக நன்மையை அடைகிறோமென்பதை நாம் உணர வேண்டுமென்றுங் கூறுவர்.

உலகத்திலே வாழுவோர் நற்பழக்கங்களைப் பழகிக்கொள்ள வேண்டுமென்றும் ஒரு பழக்கத்தைப் பழகிக்கொண்டால் அதைவிடுவது ஞானிக்குங்கூட கஷ்டமென்றும் கூறுவர். இதற்கு உதாரணமாக ஒரு கதையை ஒருநாட் கூறினர். ஒரு வலைச்சி ஒரு நாள் ஒரு மல்லிகைப்பந்தரின் கீழ்ப் படுக்க நேர்ந்தது. நெடுநேரம் படுத்திருந்தும் அவளுக்கு நித்திரை வரவில்லை. மல்லிகை மலரின் நறுமணம் அவளுக்குப் பிடிக்காததே இதற்குக் காரணம். பின்னர் மீன் கடகத்தை எடுத்துப் பக்கத்திலே வைத்தாள். உடனே தூக்கம் வந்தது.

## அரிய குணம்

தமது அன்பர்களை ஒருபொழுதும் மறவாமை சுவாமிகளின் அரிய குணம். அன்பர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் தம்மாலியன்ற உதவிபுரிவர். செல்லாச்சியம்மாவிடத்து சுவாமிக்கு அதிக அன்புண்டு. அம்மாவும் இவரைத் தமது சகோதரனாகவே பாவித்து வந்தார். இறுதிக் காலத்தில் அம்மா நோய்வாய்ப்படிருந்து உளத்தூய்மையற்றவர் கொடுக்கும் உணவை உட்கொள்ள முடியாதவராயிருந்தார். இதைக்கண்ட யோகர்சுவாமிகள் சில அன்பர்களைக் கொண்டு உணவு சமைப்பித்து தம் கையிலெடுத்துக் கொண்டுபோய்க் கொடுத்து வந்தார்.

இப்படிப் பல அன்பர்களுக்கு உதவிகள் செய்திருக்கிறார். இதற்காக அவரைக் குறை கூறுவோருமுளர். இருவர்கள் அன்பின் வலிமையை அறியாதவர்கள். சிவபெருமான் பக்தி வலையில் பட்டால் சுவாமிகள் படுவது அதிசயமா?

## சீரிய தொண்டு

சுவாமிகள் யாழ்ப்பாணத்தாருக்கு அருந்தொண்டு புரிந்திருக்கிறார். அநேக இளைஞர்களை நெறியல்லா நெறியிற் போகவிடாது. நன்னெறிப்படுத்தியுள்ளார். பொதுசன சேவையில் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது ஈடுபடுபவர்களில் அநேகர் சுவாமிகளின் கருணைக்குரியவர். நிரீச்சுரவாதிகள் கூட அவருடைய சக்தியால் ஈர்க்கப்பட்டு கடவுளின் நம்பிக்கையில்லாவிட்டாலும் சுவாமிகளிடம் நம்பிக்கையுள்ளவர்களாகக் காணப்படு கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளுக்குத் தமிழில் அதிக அன்புண்டு. அவ்வன்பை மற்றவர்களுக்கும் ஊட்டி வருகிறார். தமிழ் நூல்களில் திருவாசகத்தில்தான் சுவாமிகளுக்கு அதிக பற்று என்று கூறலாம். அவருக்குத் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், கந்தரலங்காரம் முதலிய நூல்களில் நல்ல பயிற்சி உண்டு. தம்மிடம் வருபவர்களைக் காலை மாலையில் சிவபுராணத்தைப் பாராயணஞ் செய்யச் சொல்லுவார். ஒருமுறை ஓரன்பரை திருவாசகத்தை வாங்கி சிவபுராணத்தைக் கிரமமாக ஓதும்படி கூறினார். இவர் திருவாசகத்தைப் பற்றி முன்பு கேள்விப்படாத படியால் நூலின் பெயரை உடனே மறந்துவிட்டார். வீட்டுக்குப் புறப்படும் போது சுவாமிகள் கூறிய நூலின் பெயரென்னவென்று ஒரு அன்பரைக் கேட்டெழுதிக்கொண்டு போனார். இவர்போல் தமிழ் மணம் இல்லாதவர்களுக்கெல்லாம். தமிழ் அன்பை உண்டாக்கி வருகிறார்.

இக்காலத்து எழுத்தாளர்களில் கலியாணசுந்தர முதலியார் நூல்களில்தான் சுவாமி களுக்கு அதிக விருப்பம். அதிலும் 'சைவத்தின் சமரசம்' என்ற நூலே சிறந்ததென்பது அவர் கருத்து. இந்நூலை எல்லோரையும் படிக்கும்படி கூறுவார்.

சுவாமிகளுக்கு ஓரளவு சங்கீத ஞானமுண்டு. சில கீர்த்தனைகளை இயற்றி அவற்றைச் சுரப்படுத்துவித்து சிவதொண்டனில் வெளியிட்டுள்ளார்கள். சங்கீதம் கற்கும் பிள்ளைகள் தேவாரங்களைப் பண்ணோடு ஓதுவதற்குப் பழகும்படி கூறுவர். சங்கீதத்தில் அப்பியாசம் உள்ள பிள்ளையொன்று தேவாரங்களை முறையாகப் படிக்க முடியாதிருப்பதைக் கண்டு இரங்கி, மந்திரங்களைக் (தேவார திருவாசகங்களை) கற்காமல் வெறும் சுரங்களைக் கற்பதாற் பயனில்லை என்று கூறினார்.

## முடிவுரை

நமது நாட்டில் ஒரு பெரியவர் இருக்கிறாரென்றால் அவர் சோதிடம் சொல்லுவாரா அல்லது நோய் மாற்றுவாரா என்ற கேள்விகள் தான் முதலில் புறப்படும். இவற்றுக்கும் ஞானத்துக்கும் தொடர்பில்லை என்பதை நம்மவர்களில் அநேகர் அறியார். சில பெரியாருக்குச் சித்தியுண்டு. ஆனால் அவர்கள் வாழ்க்கையில் அவற்றைப் பிரதானமாகக் கருதுவது பிழை. கடையிற்சாமி, செல்லாச்சியம்மா போன்றவர்கள் அநேகருக்கு நோய்களை மாற்றியுள்ளார்கள். ஆனால் யோகர்சுவாமிகள் இவற்றில் ஈடுபடுவது கிடையாது. நோயாளிகள் அவரிடம் போனால் அவர்களைத் தக்க வைத்தியரிடம் போகும்படி சொல்லுவர். எதிர்காலத்தில் நடக்கும் விஷயங்களை அறியும் சக்தி சுவாமிகளுக்குண்டு. இவற்றிலும் தமது கவனத்தைச் செலுத்துவது குறைவு. பெரியார்களிடம் போவதென்றால் தமது வாழ்க்கையைச் சீர்ப்படுத்தும் நோக்கமாகப் போவதே நலம். உலக விஷயங்கள் கருதிப் பெரியோர்களிடம் போவது குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வதை ஒக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச் செல்வர் திரு.சிவ.முத்துலிங்கம் (கனடா)

01. பஜனைகளைச் செய்யும் பொழுதும் நாம சங்கீர்த்தனங்களைச் சொல்லும் பொழுதும் தெய்வீக சிந்தனையுடனும் ஆழ்ந்த பக்தியுடனும் சொல்லவேண்டும்.

02. கிணற்றின் அடியில் நீர் ஊற்றில் இருந்து சுத்தமான நீர் குபு குபுவென வெளிக்கிளம்புவது போல மனித உள்ளத்தில் அடி மனதில் இருந்து இறை அன்பு கிளம்பி ஆழ்ந்த பக்தியாக பரிணமிக்க வேண்டும்.

03. தூய்மையான அன்பும் பக்தியும் இல்லாது திருமுறைகளை ஓதுவதும் பஜனைகள் நாம சங்கீர்த்தனங்களைச் செய்வதும் கிணற்றில் இருந்து வாளியினால் நீரை அள்ளி கிணற்றுக்குள்ளே திரும்பவும் ஊற்றுவது போலாகும்.

04. வாழ்நாள் முழுவதும் இறைசிந்தனையோடு வாழ்பவர்களின் உள்ளம் புனிதமடைகிறது. இறை அருள் பக்தனுக்குத் தெரியாமலே பக்தனின் பின்னால் நின்று பாதுகாக்கின்றது.

05. இஷ்ட தெய்வத்தின் நாம செபத்தை இடைவிடாது அல்லும் பகலும் சொல்லுபவர்களை இறைசக்தி இடைவிடாது கவசம் போலப் பாதுகாக்கின்றது.

06. இறைவனின் அருளை வேண்டிப் பிரார்த்திப்பவர்களுக்குப் பலன் உடனடியாக கிடைப்பதில்லை. அவர்களின் விடாமுயற்சியும் ஆண்டவனின் மேல் கொண்ட ஆழ்ந்த பக்தியும் இறைவனின் அருளைச் சுரக்க வைக்கிறது.

07. இறைவனின் கருணை பிரபஞ்சமெல்லாம் வியாபித்து இருக்கிறது. ஆண்டவனின் உதவியை நாடி பிரபஞ்சத்தின் எந்த மூலையில் இருந்து கூவி அழைத்தாலும் ஆண்டவன் ஓடோடி வந்து உதவி செய்யக் காத்திருக்கின்றார்.

08. நாட்டை ஆளும் அரசாங்கத்திற்கு வரியைக் கட்டுகின்றோம். இந்த அழகிய பிரபஞ்சத்தைப் படைத்து, சகல உயிரினங்களும் தங்கள் அடிப்படைத் தேவைகளைப் பெற்று வாழுவதற்குரிய வழிகளைச் சமைத்த ஆண்டவனை வழிபடுபவர்களோ சிந்திப்பவர்களோ எத்தனை பேர்?

09. இறைவழிபாடுகளுக்கும் இறைவனின் புகழைப் பாடும் நூல்களை வெளியிடுவதற்கும் செலவழிக்கும் பணம், இறைவனுக்கு அன்புக் காணிக்கையாக வரி செலுத்துவது போலாகும்.

10. ஒரு மகானோ ஒரு ஞானியோ ஒரு சமூகத்தின் மத்தியில் பிறந்து வாழும் பொழுது அந்த மகானை அந்தச் சமூகம் போற்றிப் பணிந்து வாழாவிட்டால் அந்தச் சமூகத்தின் வளர்ச்சியும் ஆன்மீக விழிப்புணர்வும் பின் தள்ளப்படுகின்றன.

11. ஞானதபோதனர்களின் பிறப்பினால் தெய்வீக ஒளி அகிலமெல்லாம் பரப்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அவர்களின் மறைவுக்குப் பின்பும் அவர்களின் அருள் சக்தி சீடர்களின் மூலம் வெளிக்கொணரப்படுகிறது.

13. சனாதனதர்மத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள் ஞானிகளும் மகான்களும் சித்தர்களும் ஆவார்கள்.

14. மின் காந்தத்தில் இருந்து இரும்பு காந்த சக்தியைப் பெற்று மின் இயக்கத்தைப் பரப்புவது போல இறைவனிடம் இருந்து தங்கள் இடைவிடாத பிரார்த்தனையால் இறை அருளைப் பெற்ற ஞானிகள் தங்கள் மறைவுக்குப் பின்பும் தங்கள் சமாதியில் இருந்து அருள் சக்தியைப் பரப்புகிறார்கள்.

15. சித்தர்கள் ஞானிகளின் சமாதிகள் இருக்கும் ஆலயங்களில் அருள் சக்தி கூடுதலாக இருப்பதையும், கூடுதலான மக்கள் வழிபடுவதையும் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

16. எந்த ஒரு செயலுக்கும் தூண்டுதல் இருக்க வேண்டும். ஏதாவது பின்னுக்கு நின்று தூண்டி இயக்குவித்தால்தான் அந்தச் செயல் மக்கள் முன் பரிணமிக்கும்.

17. கருணை, பக்தி, தருமம், அறம், அன்பு வழிநின்று வாழுபவர்களை இறைவன் பின்நின்று பாதுகாப்பான்.

18. உலகியல் அறிவு வளர்ச்சி அடைந்து ஆன்மீக அறிவு குன்றிய இந்தக் காலத்தில் மானிடர்கள் எப்படியும் வாழலாம் என்று வாழுகின்றார்கள். தங்களுக்கென ஒரு கொள்கையை அமைத்து இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழுவதே உயர்ந்த வாழ்க்கை. மனித வாழ்க்கையில் குறிக்கோளும் இலட்சியமும் இருக்கவேண்டும்.

19. குறிக்கோளுடனும் இலட்சியத்துடனும் வாழ்ந்த பெருமக்கள் அழியாப் புகழைப் பெற்றார்கள். அதற்கு நாவலர் பெருமான் ஒரு நல்ல உதாரணம்.

20. புராணங்களைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் அவற்றில் உள்ள மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்களைப் பொருட்படுத்தாமல் ஆழ்ந்த கருத்துக்களைச் சிந்தித்து தெளிவைப் பெற்று அதன்படி ஒழுக வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாட நல்வாழ்விற்கு பத்து விதிமுறைகள்

01. காலையில் எழுந்தவுடன் கடவுளை இரண்டு நிமிடங்களாவது நினைத்துப் பிரார்த்தனை செய்க.

02. நெற்றியில் திருநீறு வைத்துக் கொள்க.

03. அன்றைய நாள் நல்ல நாளாக இருக்கவேண்டும் என்று இறைவனிடம் வேண்டிக் கொள்க.

04. அனைத்துப் புண்ணிய நதிகள் கோமாதா சிரஞ்சீவிகள் சப்த கன்னியர்கள் முதலியவர்களை ஒருநிமிடமாவது தியானிக்குக.

05. வாரத்தில் ஒருநாளாவது (வெள்ளிக்கிழமையிலாவது) அருகிலுள்ள திருக்கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடுக.

06. உன் பக்கத்தில் வாழ்பவரை நேசித்துப் பழகுக.

07. அன்றாடம் குறைந்தபட்சம் ஒரு சதமாவது தர்மம் செய்க.

08. சாப்பிடுமுன் மிருகங்களுக்கோ பறவைகளுக்கோ ஆகாரம் அளித்துவிட்டுப் பிறகு சாப்பிடுக.

09. நித்திரைக்குச் செல்லுமுன் அன்றைய நாளில் நீ செய்த நல்லவை கெட்டவைகளை நினைத்துப்பார்க்குக.

10. இறை நாமத்தை 108 முறை உச்சரித்து விட்டுப் பின்பு உறங்குக.

---

| | |
|---|---|
| 01.04.2006 | கார்த்திகை விரதம், சக்தி கணபதி சதுர்த்தி விரதம் |
| 03.04.2006 | ஷஷ்டி விரதம் |
| 05.04.2006 | நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் குருபூஜை, மஹாஷ்டமி |
| 08.04.2006 | யோகர் சுவாமிகள் குருபூஜை |
| 09.04.2006 | ஏகாதசி விரதம் |
| 11.04.2006 | பங்குனி உத்தரம், பிரதோஷ விரதம் |
| 13.04.2006 | பூரணை விரதம்,ஊரெழுகிளானைப்பதி ஸ்ரீபர்வதபத்தினி மனோன்மணியம்மாள் ஸ்ரீ சக்கர பூஜை |
| 14.04.2006 | பெரிய வெள்ளி, தமிழ் விய வருஷப்பிறப்பு |
| 15.04.2006 | சுன்னாகம் கதிரமலை சிவன் கொடி |
| 17.04.2006 | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 19.04.2006 | ஏழாலை பெரியதம்பிரான் கொடியேற்றம் |
| 21.04.2006 | நடேசர் அபிஷேகம் |
| 23.04.2006 | திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை |
| 24.04.2006 | ஏகாதசி விரதம் |
| 25.04.2006 | பிரதோஷ விரதம் |
| 27.04.2006 | அமாவாசை |
| 28.04.2006 | சித்திரைப் பரணி |
| 29.04.2006 | கார்த்திகை விரதம் |
| 30.04.2006 | மங்கையர்க்கரசியார் குருபூஜை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா நேயர்களுக்கு.....

*அன்புடையீர்,*

இறைவன் திருவருளினாலும் மகான்களில் நல்லாசியினாலும் பக்தர்களின் நல்லெண்ணத்தினாலும் ஆத்மஜோதி 12வது இதழ் வெளிவந்துள்ளதை அறியத் தருகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரிய காலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகத் தொண்டு பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்

**ஆத்மஜோதி தியான மணிமண்டபம்**

**ஏழாலை**

தொடர்பு:-
**நா.முருகையா**
**ஊரெழு கிழக்கு**
**சுன்னாகம்.**

***என்றென்றும் உங்கள் ஆதரவு கிடைப்பதாக***

---

## ஆத்மஜோதி ஆயுள் சந்தா வழங்கியவர்கள்

- **திரு.T.கருணாமூர்த்தி** - 405, கோவில் வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்.
- **வஷந்தநாகபூஷணி அம்மன் தேவஸ்தானம், ஏழாலை.**
- **யப்னா எலக்ரிக்கல்** - மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
- **V.M.K. நகை மாளிகை** - மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
- **இராசேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்**- 105, மின்சார நிலைய வீதி,யாழ்ப்பாணம்.
- **சிவன் மாளிகை** - கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
- **A.S.ஆறுமுகம் அன்சன்** - ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
- **விக்கினேஸ்வர ரெக்ஸ்ரைல்ஸ்**-யாழ் சாலை, சாவகச்சேரி.
- **M.மகேந்திரன்** - 126, டெம்ஸ் ரோட், மவுன்லெவணியா
- **ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்** - பலாலி ரோட், திருநெல்வேலி.
- **இ.திருச்செல்வம் (தலைவர்)** - பர்வதபத்தினி மனோன்மணி அம்மன் தேவஸ்தானம், ஊரெழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி - தெற்கு பிரதேச சபை
ஏழாலை உப அலுவலகம்
18 APR 2006
பெற்றுக்
கொள்ளப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி முத்தையா அவர்களின் வெளியீடுகள்

வலி - தெற்கு பிரதேச சபை
பொது நூலக உப அலுவலகம்
1 8 APR 2005
பெறப்பட்டது
தொள்ளப்பட்டது

- ஆத்மஜோதி
- ஏழாலை
- ஈழத்துச் சித்தர்கள்
- முப்பெரும் சித்தர்கள்
- நவராத்திரிப் பாமாலை
- கேதாரபத்திரி யாத்திரை
- இந்தோனேசியாவில் 2 வருடம்
- திருமுறைக் கதைகள்
- அர்ச்சனை மாலை ஆத்மஜோதி மண்டப வெளியீடுகள்
- பிள்ளையார் பெருங்கதை
- சிறுவர்களுக்கேற்ற பிள்ளையார் கதை
- புதிய சைவ வினாவிடை (1)
- விதியை வெல்வது எப்படி
- கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்



பசுவதையை நிறுத்துவோம்
பசுவைக் காப்போம்.



ஒரு பசு 1000 பேருக்கு பால் கொடுக்கும்
ஒரு பசுவைக் கொன்றால் 25 பேர் சாப்பிடுவர்

இச்சஞ்சிகை ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டப சபை திரு.நா.முருகையா அவர்களால்
இல:351 மணிக்கூண்டு வீதி யாழ்ப்பாணம்; ஐய்ராம் பிறின்ரேஸ் ஸ்தாபனத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org